விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka





# வலம்புரி

Valampurii

புக்கங்கள்: பதினாறு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 28 திங்கட்கிழமை (14.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 360

# சரணடையும் புலிகளின் தலைவர்களை கொல்லுமாறு உத்தரவிடப்பட்டது!



## ஜெனரல் சரத் பொன்சேகா அதிர்ச்சித்தகவல்

(கொழும்பு)

போரின் இறுதி நாட்களில் சரணடையும் விடுதலைப்புலிகளின் தலைவர்களை உடனடியாக சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய இராணுவத்திற்கு உத்திரவிட்டிருந்தார் என முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். கொழும்பில் இருந்து வெளிவரும் சன்டே லீடர் வார ஏட்டுக்கு அவர் வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார். (16 பக்கம் பார்க்க)

## உள்ளே...

தமிழகத்தின் பிரபல சோதிடர் சிவல்புரி சிங்காரம் எழுதும் குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## இந். பிரதமரை சந்திக்க ரணில் தீர்மானம்!

(கொழும்பு)

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட முக்கிய இந்திய தலைவர்களை ரணில் விக்கிரமசிங்க சந்திக்க உள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா பொது வேட்பாளராக (02ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றை கலைக்கத்திட்டம்?

(கொழும்பு)

ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்ற கலைப்பு தொடர்பிலான உத்தரவை பிறப்பிக்க ஜனாதிபதிக்கு எவ்விததடையும் இல்லை என தேர்தல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு எவ்வித சட்ட சிக்கலும் கிடையாது என தேர்தல் திணைக்கள் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு போதியளவு கால அவகாசம் வழங்கக் கூடிய வகையில் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் எனக் குறிப்பிடப்படுகிறது.

இதன்படி (02ஆம் பக்கம் பார்க்க)

## வோர்ட் சூறாவளி இன்று வடக்குப் பகுதியை தாக்கும்

### காலநிலை அவதான நிலையம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் கிழக்குக் கடற்பரப்பில் நிலைகொண்டுள்ள 'வோர்ட்' சூறாவளி இன்று வடக்குப் பிரதேசங்களை தாக்கக்கூடுமென காலநிலை அவதான நிலையம் எச் சரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலையிலிருந்து 250 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ள இச் சூறாவளி பாரிய சேதங்களை விளைவித்துக் கொண்டு வடக்கு (02ஆம் பக்கம் பார்க்க)


## கைது செய்யும் எண்ணத்தைவிடுத்து உருத்திரகுமாரனுடன் பேசுங்கள்

### இலங்கைக்கு அமெரிக்கா ஆலோசனை

(கொழும்பு)

உருத்திரகுமாரனைக் கைது செய்வதற்குப் பதிலாக மீண்டும் பேச்சுக்களைத் தொடங்குவது குறித்து அவருடன் கலந்துரையாடுமாறு இலங்கை அதிகாரிகளுக்கு தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் பிளேக் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

ஏற்கனவே-மாவீரர் நாளான கடந்த நவம்பர் 27ஆம் திகதி உருத்திரகுமாரனைக் கடத்துவதற்கு அரச பாதுகாப்பு மற்றும் புலனாய்வு உயர் வட்டாரங்கள் (02ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு 4 நிபந்தனைகள் விதித்து ஆதரவு!

### சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போவதில்லை. எனினும் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரை நான்கு நிபந்தனை களை முன்வைத்து தெரிவு செய்வது தொடர்பில் விரைவில் முடிபெடுக்கப்படும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று (02ஆம் பக்கம் பார்க்க)

## கட் அவுட்களை அகற்ற ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

பாரியளவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தமது போஸ்டர்களையும் கட் அவுட்களையும் அகற்றுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தப் பணிப்புரை பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரியவுக்கு விடுக்கப்பட்டுள்ளது. வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படும் முன்னர் இந்த போஸ்டர் (02ஆம் பக்கம் பார்க்க)

## கனடா நாடாளுமன்றத் தேர்தல் ஈழத் தமிழ்ப் பெண் போட்டி

(ரொரன்டோ)


கனடாவில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளராக ஈழத்தமிழரான செல்வி ராதிகா சிற்சபேசன தெரிவாகியுள்ளார்.

இவர் பெருமளவில் தமிழர்கள் வாழும் நாடாளுமன்றத் தொகுதியிலேயே வேட்பாளராக போட்டியிட உள்ளார்.

கனடாவின் முக்கிய கட்சியில் ஒன்றான புதிய ஜனநாயகக் கட்சியின் புதிய வேட்பாளர் நியமனக் கூட்டத்திலேயே இவரது பெயர் முன் மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ச-5)

## 30 வருடம் இடம்பெற்ற போரில் 23 ஆயிரம் படையினர் உயிரிழப்பு

### இராணுவத்தளபதி தகவல்



(கொழும்பு)

கடந்த 3 தசாப்த போரில் 23 ஆயிரத்து 382 இராணுவத்தினரை இழந்ததுடன் 81 ஆயிரத்து 199 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்தவார இறுதியில் பத்தாலந்த பாது (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதிய உயர் கல்வி நிறுவனத்திற்கு விஜயம் செய்தார். அங்கு ரணில் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் உரையாற்றுவதையும், மாணவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## கைது செய்யும் எண்ணத்தை...

சில திட்டங்களைத் தீட்டியிருந்தன.

மலேசியாவில் இருந்து ஏற்கெனவே கடத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் செயலாளர் நாயகம் செல்வராசா பத்மநாதனை இந்தத் திட்டத்தில் பயன்படுத்துவது அவர்களது திட்டமாக இருந்தது.

ஆனால், அந்த திட்டத்தை நிறைவேற்ற முடியாத சூழல் ஏற்பட்டதால்-உருத்திரகுமாரனைக் கைது செய்யும் தனது திட்டத்தை இலங்கை அரசு முழுமையாகக் கைவிட்டிருந்தது.

இந்நிலையில் உருத்திரகுமாரனைக் கைது செய்யும் புதிய யோசனையுடன் இலங்கை அரசு றொபேட் பிளேக்கை அணுகியது.

அப்போது-உருத்திரகுமாரன் பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புபட்டிருந்தார் என்பதற்கான ஆதாரங்களை வழங்கினால் அதனைப் பரிசீலிக்கலாம் என பிளேக் பதில் அளித்துள்ளார். (ச-5)

## ஜனாதிபதி வேட்பாளர் ஒரு...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த வெள்ளிக் கிழமை தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களை தொடர்ந்து இந்த முடிபு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் இரு பிரதான வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் இன்னமும் முடிபுகள் எடுக்கப்படவில்லை. அது தொடர்பாக தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. நான்கு நிபந்தனைகளை முன் வைப்பது தொடர்பாக பேச்சுக்களை நடத்தி வருகின் றோம்.

1. போரின் போது காணாமல் போனோர் மற்றும் கைது செய்யப்பட்டோர் தொடர்பாக முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் மீள் குடியமர்த்தப்பட வேண்டும்.

3. உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப் படவேண்டும்.

4. அரசியல்தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

இந்த நான்கு கோரிக்கைகளை முன் வைத்து நாம் எமது ஆதரவுகளை வழங்கவுள்ளோம். எமது கட்சியின் நிபந்தனைகள் குறித்து நாம் ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜ பக்ஷவுடனும் ஐக்கியதேசிய கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியாவுடனும் கலந்துரையாடவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ச-5)

## வோர்ட் சூறாவளி இன்று ...

நோக்கி வரும் என எச்சரிக் கப்பட்டுள்ளது. இச் சூறாவளியின் காரணமாக இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேல் மற்றும் வடமத்தியமாகாணங்களில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யவுள்ளதா கவும் பொது மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வங்களாவிரிகுடாவில் நிலை கொண்டுள்ள தாழ் அமுக்கம் கடந்த சில நாட்களாக இலங்கையை நோக்கி நகர்ந்து திருகோணமலையிலிருந்து 250 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளது.

இத் தாழ் அமுக்கம் இன்று வடக்குப்பகுதிகளை தாக்கக்கூடும் எனவும் கடல் கொந்தளிப்புடன் காணப்படும் எனவும் மீனவர்களை தொழிலுக்கு செல்லவேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமராட்சி கரையோரப் பகுதிகளில் மக்களை அவதானமாக இருக்குமாறு பொலிஸார் ஒலி பெருக்கி மூலம் அறிவித்துள்ளனர். நேற்றிரவு இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டது. அத்துடன் மீனவர்கள் கடலுக்குச் செல்லவும் அனுமதிக்கப்படவில்லை. (ச-3,5,10)

## கட் அவுட்களை...

களையும் கட் அவுட்டுகளையும் அகற்றுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் மகிந்த ராஜபக்ஷவின் பாரியளவிலான கட் அவுட்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பொது மக்கள் தமது கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ள நிலையிலேயே ஜனாதிபதியின் இந்த உத்தரவு வெளியாகியுள்ளது. (ச-5)

## ஜனாதிபதித் தேர்...

பெரும்பாலும் ஜனவரி மாத இரண்டாம், மூன் றாம் வாரங்களில் நாடாளுமன்ற கலைப்பு தொடர்பிலான அறிவிப்பினை ஜனாதிபதி உத்தியோக பூர்வமாக மேற்கொள்வார் எனவும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-5)

## இந்.பிரதமரை...

பெயரிடப்பட்டதன் பின்னர் ரணில் விக்கிரம சிங்க முதல் தடவையாக இந்தியாவிற்கு விஜயம் செய்கின்றமை குறிப்பிடத் தக்கது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர் பில் ரணில் விக்கிரம சிங்க இந்தியத் தலை வர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)


**தவறிவிட்டது**


நாகேஸ்வரன் பார்த்தீபன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (833084984V) ஒரு தொகைப் பணமும் 12.12.2009 அன்று புன்னாலைக்கட்டுவன் சந்திக்கும் சுன்னாகம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். **தொடர்பு:**

T.P: 077 8575026, 0778264732

முத்துமாரி அம்மன் கோவிலடி, அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

(4174)


## விஜய்யின் வேட்டைக்காரனுக்கு வெளிநாடுகளில் எதிர்ப்பு!



(சென்னை)

விஜய் நடிக்கும் வேட்டைக்காரன் படத்துக்கு மீண்டும் ஒரு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த முறை உள்ளூரில் அல்ல; வசூலுக்கு பெரிதும் நம்பியிருக்கும் வெளிநாடுகளிலிருந்து இந்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸுடன் இரகசிய உறவு வைத்துக் கொண்டு ஒப்புக்காக ஈழத் தமிழர்களுக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்த விஜய்யின் வேட்டைக்காரனைப் புறக்கணிப்போம் என ஈழத் தமிழர்கள் போர்கொடி தூக்கியுள்ளனர். ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளில் இந்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இலங்கை இராணுவத்துக்கு வன்னிப் போர் காலத்தில் பாடல்கள் உருவாக்கிய ராஜ் வீரரத்னே என்பவருடன் இணைந்து பணியாற்றும் விஜய் அன்ரனி இந்தப் படத்துக்கு இசையமைத்துள்ளார்.

இப்படத்தில் வரும் ஒரு பாடலில் சிங்களப் பாடலின் மெட்டையும் அப்படியே பயன்படுத்தியுள்ளார். எனவே இந்தப் படத்தை அனைத்து தமிழர்களும் புறக்கணிக்க வேண்டும். இப் படம் தயாரிக்கும் போதும், பாடல் காட்சிகள் படமாக்கப்படும் போதும் இத் தவறுகள் தமிழ் நாட்டில் பலரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இதனை நடிகர் விஜய் புறக்கணித்துள்ளார் என எதிர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விஜய் தரப்பினர் தமிழர்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை; உபத்திரம் செய்யாமல்; தமிழர்களின் மனதைப் புண்படுத்தாமல் வாழ கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே நாம் இவர்களுக்கு புகட்டும் நல்ல பாடமாக அமையும்.

இந்த எதிர்ப்பு கோஷத்தை தமிழர்களுக்கு, தமிழர்கள் தெரியப்படுத்துங்கள் என எதிர்ப்பாளர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## 30 வருடம் இடம்பெற்ற...

காப்புக் கட்டளைப் பணியகத்தில் நடை பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இந்தத் தகவல்களை வெளி யிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது, நாம் தனிப்பட்ட நபர்களுக்கு நன்றியுடை யவர்கள் அல்ல.

நாட் டுக்கு அல்லது ஒரு அமைப்புக்கே நன்றியுடையவர்கள். அரசியல் எதிர்பார்ப்புகள் இராணுவத்தின் செயற்பாடுகளை பாதிப்படைய செய்யாது.

இராணுவம் எப் போதும் தனது ஒழுக்கத்தைப் பேணும் என்பதை நான் உறுதிப்படுத்திக் கொள்கின்றேன்.

நீங்கள் சீருடையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் உங்களின் எந்தநடவடிக்கையும் இராணுவத்தின் ஒழுக்கத்தை பாதிக்கும் என்பதை நீங்கள் நினை வில் கொள்ளல் வேண்டும் அது என்னையும் உங்களையும் கூடப்பாதிக்கும்.

30 வருடகாலப் போரில் 842 அதிகாரிகளும் 19 ஆயிரத்து 44 இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர். 124 அதிகாரிகளும் 3 ஆயிரத்து 362 இராணுவத்தினரும் காணா மல் போயுள்ளனர். 81 ஆயிரத்து 199 படையினர் படுகாயம் அடைந்துள்ளனர். 302 இராணுவத்தினர் சுயமாக இயங்கும் தன்மையை இழந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)


**University Dissertation**

**பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள்**

நவீன தொழில்நுட்பங்களை கையாண்டு சிறப்பான முறையில் அனைத்து வகையான ஆய்வுக் கட்டுரைகளும் Binding செய்து உடனுக்குடன் கொடுக்கப்படும்.

**பாலராஜி சமூகவலுவூட்டல்**

No.249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 077 9789341

(C-3925)



**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரி ஆசிரியை திருமதி த.கிருபானந்தா அவர்களின் மாமனார்

**கந்தையா கிருஷ்ணசாமி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்கள் 12.12.2009 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லுறவு மன்றம்

யா/செங்குந்த இந்துக் கல்லூரி

(C-3926)



**யாவரும் எதிர்பார்க்காத அதிரடி மலிவு விற்பனை**

50 வருட பூர்த்தியை முன்னிட்டு 20%-40%வரையான விசேட கழிவு

எங்களிடம் எல்லாவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், சிறுவர்களுக்கான நாலுறுள், இரட்டை றுள் கொப்பிகள் (160,80 பக்கங்களில்) மற்றும் எழுது கருவிகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் தெரிவு செய்து குறைந்த விலையில் தரமான பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தரங்குறைந்த கொப்பிகளை வாங்கி சிறுவர்களின் தரத்தைக் குறைக்காதீர்கள்

2500/- பெறுமதிக்கு அதிகமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய My Clear Bag (Rexion) இலவசமாக வழங்கப்படும்.

சனி ஞாயிறு தினங்களில் முழுமையாக எமது நிறுவன வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C-3886)

# இன்று ஒரு தகவல்

## அடுத்தவரும் வாழவேண்டும்

இந்த உலகத்தில் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைப்பவர்கள் உண்டு.

தானும் வாழ வேண்டும், மற்றவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பவர்களும் உண்டு.

முதலில் சொன்ன வகையைச் சேர்ந்த மனிதர்கள் எப்படித் தெரியுமா?

எப்படியாவது தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற நினைப்புத் தான் எப்பொழுதும் அவர்களுக்கு இருக்கும். தங்களுடைய வளர்ச் சிக்கு எது தடையாக இருந்தாலும் சரி யார் தடையாக இருந்தாலும் சரி அதை அழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள்.

அவர்களெல்லாம் பாவ காரியங்களுக்குத் தயங்கவேமாட்டார்கள்.

அப்படிப்பட்ட வாழ்க்கை அவர்களுக்கே இடைஞ்சலாக அமைந்து விடுவதுண்டு.

அதை விளக்குவதற்காக ஒரு கதையும் உண்டு.ஒரு ஊரில் அப்படிப்பட்ட ஒரு ஆள் இருந்தான். பல பாவங்களைச் செய்தவன். அதன் காரணமாக ஒரு நரகப் படுகுழியில் விழுந்துவிட்டான்.

நரகப்படுகுழி என்பது ஒரு பெரிய கிணறு மாதிரி. ஏற்கனவே பாவம் செய்தவர்கள் நிறையப்பேர் அதில் விழுந்து கிடந்தார்கள். உள்ளே ஏகப்பட்ட சத்தம்.எல்லாம் அந்தப் பாவாத்மாக்கள் போடும் சத்தம்.

இப்பொழுது விழுந்தானே இவனும் சத்தம் போட்டான். இவன் போடும் சத்தம் கொஞ்சம் அதிகமாகக் கேட்டது.

அந்தக் கிணற்றுக்குப் பக்கத்தில் புத்தர் உட்கார்ந்திருந்தார். அவருடைய காதில் இவன் போடும் சத்தம் விழுந்தது. உடனே அந்தக் கிணற்றுக்குப் போனார்.குனிந்து பார்த்தார்.

''சாமி... என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று கத்தினான் இவன்.

புத்தர் அவனைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்தார். மனித சமுதா யத்திற்கு அவன் என்னென்ன தீமை செய்திருக்கிறான் என்ற விபரமெல்லாம் அவரது மனக் கண்ணில் தெரிந்தது. அவருக்கு எல்லாம் புரிந்துவிட்டது.

இருந்தாலும் அவனைக் காப்பாற்றுவதற்கு ஏதாவது வழியுண்டா என்று யோசித்தார். அவன் தன்னுடைய வாழ்நாளில் ஏதாவது நல்லது செய்திருக்கிறானா என்று பார்த்தார்.

ஒரே ஒரு சமயம் அவன் தன் காலடியில் மிதிபட இருந்த சிலந்தியை மிதிக்காமல் தாண்டிப் போயிருந்தான். இந்த ஒரு காரியத்துக்காக அவனைக் கரையேற்ற முடியும்? என்று நினைத்தார். அவ்வளவு தான். உடனே அவரது கையில் ஒரு சிலந்தி வந்து உட்கார்ந்தது. அதனிடமிருந்து நூலிழை வெளிவர ஆரம்பித்தது.அந்த நூலிழை கிணற்று ஆழம் வரைக்கும் நீண்டு கொண்டே போனது.

புத்தர் பார்த்தார்.''இந்த நூலைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறிவா''என்றார்.

''என்ன சொல்கிறீர்கள்! இந்தச் சிலந்தி நூல் என்னைத் தாங்குமா?''என்று கத்தினான்.

''எல்லாம் தாங்கும். அதைப் பிடித்து மேலே ஏறிவா'' என்றார்.

சந்தேகத்துடன் அந்த நூலிழையைப் பிடித்து இழுத்துப் பார்த்தான்.வலுவாக இருந்தது.

அவனுக்கு ஆச்சரியம்.

அதைப் பிடித்துக் கொண்டே மெதுவாக மேலே ஏறிவர ஆரம்பித் தான்.அரைவாசித் தூரம் ஏறி வந்திருப்பான்.

அப்பொழுது... அவனுடைய காலுக்குக் கீழே ஏதோ சத்தம் கேட்டது.என்னவென்று கீழே குனிந்து பார்த்தான்.கீழே நின்ற சிலரும் அதே நூலைப் பிடித்து மேலே வந்து கொண்டிருந்தார்கள்.

இவனுக்குக் கோபம் வந்துவிட்டது.தன் இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து தன் காலுக்குக் கீழே நூலிழையை வெட்டி விட்டான். இனிமேல் நாம் மட்டும் மேலே வந்துவிடலாம் என்று நினைத்தான்.

ஆனால் என்ன நடந்தது தெரியுமா? மொத்த நூலிழையும் அறுந்து விழுந்தது.அவனும் பொத்தென்று கீழே விழுந்து விட்டான். மறுபடியும் கத்த ஆரம்பித்தான்.ஏற்களவே அவன் செய்திருந்த ஒரு சிறு கருணை அந்த நூலிழைக்கு உறுதியைக் கொடுத்தது.

இப்பொழுது அவன் செய்த பாவம் அந்த நூலிழையை வலுவிழக்கச் செய்துவிட்டது.

மற்றவர்களும் வாழவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருந்திருந்தால்... இப்பொழுது அவனும் கரையேறி வந்திருப்பான்.அதனால் நாமும் வாழவேண்டும்.மற்றவர்களும் வாழவேண்டும் என்று நினைப்பவன் வாழ்க்கையில் விரைவாக முன்னுக்கு வந்து விடுவான்.

ஒருத்தன் டாக்டரிடம் போனான்.மருந்து வாங்கினான். வாங்கிக் கொண்டு வந்து வைத்துவிட்டான். அதை உட்கொள்ளவேயில்லை.

''எதற்காக போய் மருந்து வாங்கினாய்?''என்று கேட்டார்கள்.

''டாக்டர் வாழவேண்டும் இல்லையா அதனால்தான்''என்றான்.

''அவர் கொடுத்த மருந்தை நீ ஏன் சாப்பிடவில்லை?'' என்றார்கள்.

''நான் வாழவேண்டுமல்லவா... அதற்காக'' என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஏஎச்1என்1 தொற்றினால் இதுவரை 23 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நொவெல் இன்ப்ளுவென்சா எனப்படும் ஏஎச்1என்1 வைரஸ் தொற்றினால் இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களுள் கர்ப்பிணித் தாய்மார்களும் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை நொவெல் இன்ஃப்ளுவென்சா ஏஎச்1என்1 வைரஸ் தொற்றுக்குள்ளான 420 நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இதைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தடுப்பூசி எதிர்வரும் ஜனவரி மாதமளவில் இலங்கைக்கு கொண்டுவரப்படும் என தொற்று நோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஏற்கனவே திட்டமிட்டுள்ளதாகவும் தொற்று நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் நோய் அபாயம் அதிகமுள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு விரைவில் தடுப்பூசி ஏற்றுவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் முதற் கட்டமாக சுகாதார ஊழியர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோருக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

# இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு இலவச துவிச்சக்கர வண்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம், உயர்தரம் ஆகிய பிரிவுகளில் கல்விகற்கும் மாணவ மாணவியர்களுக்கு இலவசமாக துவிச்சக்கர வண்டிகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் முதல் 650 துவிச்சக்கர வண்டிகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை வட மாகாணத்தில் 16 பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். மன்னார் பாலம், ஜோதவாவி, தலைமன்னார் வீதி ஆகியன இவற்றில் பிரதானமானவையாகும்.

வடக்கில் முன்னெடுக்கப்படும் மொத்த அபிவிருத்தித் திட்டங்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 362 ஆகும். இதற்காகச் செலவிடப்படும் தொகை 4 ஆயிரத்து 530 மில்லியன் ரூபா ஆகும்.

இதேவேளை மேலும் 10 ஆயிரத்து 500 ஏக்கர் விசாலமுள்ள நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக வடமாகாண ஆளுநர் மேலும் தெரி வித்துள்ளார். (6-9)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று திங்கட் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் செ. பரமேஸ் வரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. மாதவகுமாரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக சிற்றி ஹோட்டல் பொதுமுகாமையாளர் த.ராஜ்குமார் கலந்துகொள்ளவுள்ளார். (6-4)

# ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவையை வழங்க ரூபா 400 மில்லியன்

## கல்வியமைச்சு வழங்கியுள்ளது

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கான நிலுவைச் சம்பளத்தை தாமதமின்றி வழங்குவதற்கு 400 மில்லியன் ரூபாவை கல்வியமைச்சு வழங்கியுள்ளதாகக் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கல்வியமைச்சில் இடம் பெற்ற நிகழ்வின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அந்தந்த மாகாணங்களுக்குரிய .நிலுவைச் சம்பளம் உரிய மாகாணக் கல்வியமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அம் மாகாணங்களிலிருந்து கோரப்பட்டிருந்த தொகை முழுமையாக அனுப்பப்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ளார். (2-6)

# இராசி பலன்

*14.12.2009*
*(கார்த்திகை 28 திங்கட்கிழமை)*
*திரயோதசி பிற்பகல் 4.32 மணிவரை*
*விசாகம் பிற்பகல் 2.32 மணிவரை*
*இராகுகாலம் 7.51 - 9.21 மணிவரை*
*சுபநேரம் 12.21 - 1.51 மணிவரை*
*நான்காம் கார்த்திகை சோமவாரம்*

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத மனஸ்தாபம், பணக்குறைவு , காரியதாமதம் , ஆரோக்கியக்குறைவு. |
| இடபம் | குடும்பசுகம், தனவருவாய், முயற்சிகைகூடும், விருந்துபசாரம். |
| மிதுனம் | சத்துரு ஜெயம், தேகநலன், எடுத்த காரியம்கைகூடும், சுவாரஸ்யம். |
| கடகம் | வியாபார சிந்தை, புத்திரரால் கவலை, பணக்குறைவு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | மாதாசுகம், பிரயாணம், நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி. |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை, சகோதரர் உதவி. |
| துலாம் | கோபப்படுதல், தனவிரயம், முயற்சி தாமதம், போசன சுகம். |
| விருச்சிகம் | சிந்தனை மிகுதி, புதிய முயற்சி, போசனசுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | இடமாற்றம், உறவினர் சந்திப்பு, சுபசெலவு, மனச்சஞ்சலம். |
| மகரம் | எடுத்த காரியம், கைகூடும், கீர்த்தி, தனலாபம், போசனசுகம். |
| கும்பம் | நிலைமாற்றம், தேகநலன், தொழில் மேன்மை, நல்ல செய்தி. |
| மீனம் | ஆன்றோர் சந்திப்பு, திடீர் பயணம், தனவிரயம், புதிய முயற்சி. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 240 | 280 | 200 |
| தக்காளி | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 90 | 80 |
| கரட் | 100 | 120 | 100 |
| பூசணி | 60 | 70 | 40 |
| புடோல் | 80 | 100 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 130 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 180 |
| பாகற்காய் | 80 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 30 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 30 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | -- |
| கறிமிளகாய் | 180 | 200 | -- |
| முருங்கைக்காய் | 130 | 140 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 30 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | -- |

## தேர்தலில் வெற்றி பெற்றதும்

# ஜனாதிபதி முறைமைக்கான மாற்றுயோசனை சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றதும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதி முறைமையில் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான யோசனையை பாராளுமன்றத்தில் முன்வைப்போம். அதன் போது ஐக்கிய தேசிய கட்சியும் மக்கள் விடுதலை முன்ன ணியும் ஆதரவளிக்கின்றனவா? பார்ப்போம் என்று அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.யு. குணசேகர தெரிவித்தார்.

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக தேர்தல் ஒன்றின் வேட்புமனுவில் வெளிநாட்டு சக்தியின் அழுத்தங்கள் காணப்படுகின்றன. இதனை வோஷிங்டன் இணக்கப்பாட்டு வேட்புமனு என்றே நான் பார்க்கின்றேன். யுத்த காலத்தில் மூன்றாம் உலக நாடுகளே எமக்கு ஆதரவு வழங்கின என்றும் அமைச் சர் குறிப்பிட்டார்.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய் தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

உள்நாட்டில் உள்ள எதிர் சக்திகள் மற்றும் வெளிநாட்டு எதிர் சக்திகள் ஆகியவற்றின் துணையுடன் சந்தர்ப்பவாத கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குதல் மற்றும் ஜனநாயகம் பற்றி பேசுகின்றனர். ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதே இவர்களின் நோக்கம்.

எதிரணி வேட்பாளர் ஜனாதிபதியானால் என்ன நடக்கும்? பிரதமர் இருக்க மாட்டார். பாராளுமன்றம், அமைச்சரவை இருக்காது. அதேநேரம் அவர் முப்படைகளின் தளபதியாகவும் இருப்பார். அனைத்து அதிகாரங்களும் பயன்படுத்தப்படும் நிலைமை ஏற்படும். தெற்காசியாவில் எமது நாட்டில் மட்டுமே இவ்வாறு இராணுவ அரசியல் இதுவரை இடம்பெறவில்லை என அவர் மேலும் கூறினார்.

(ஓ-2-6)

## தீட்சை வழங்கல்

சுழிபுரம் சம்புநாதஸ்வர ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு சிவதீட்சை வழங்கப்படும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. வழக்கம்பரை முத்துமாரி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சு. சுந்தரராஜக் குருக்கள் தீட்சை வழங்கவுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு தட்சணாமூர்த்திக்கு விசேட அபிசேகம் இடம்பெறவுள்ளது. (6-17)

## மறவன்புலோ கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு மறவன் புலோ கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த அனைத்து குடும்பத்தலைவர்களையும் சுவிஸ் அபிவிருத்தி நிறுவன பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளதால் அனைவரையும் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்திற்கு வருகை தருமாறு தென்மராட்சி தெற்கு மீன் குடியமர்வோர் சங்க செயலாளர் சி.தங்கவேலு தெரிவித்தார்.

தத்தமது வீட்டுக்காணி உறுதி போட்டோ பிரதியுடன் காணி உரிமையாளர் சமூகமளிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் உலர் உணவு அட்டை, போட்டோ பிரதி ,குடும்பத்தில் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பெயர் விபரம் ஆகியவற்றை உடன் எடுத்துவரவேண்டும் எனவும் சுவிஸ் அபிவிருத்தி நிறுவன பிரதிநிதிகள் அன்றைய தினம் தென்மராட்சி தெற்கு மறவன்புலோ கிராம அலுவல பிரிவை சேர்ந்த அனைத்து வீடுகளையும் பார்வையிடவுள்ளதால் வீட்டுச் சுற்றாடல்களையும் வீதிகளையும் துப்பரவு செய்து வைத்திருக்குமாறும் தென்மராட்சி தெற்கு மீன் குடியமர்வோர் சங்க செயலாளர் கேட்டுள்ளார். (6-9)



சாவகச்சேரி லயன்ஸ் கழக அனுசரணையுடன் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஐ.நா.தின நிகழ்வில் முதன்மை விருந்தி னராக கலந்துகொண்ட லயன் பி.ஆர்.ரஞ்சன் , சிறப்பு விருந்தினராக கே. துரைராசா மற்றும் விருந்தினர்களை வித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம் சாரண ஆசிரியர் கு.சுமுகலிங்கம் மற்றும் சாரண மாணவர்கள் அழைத்து வருவதைப்படத்தில் காணலாம்.

# வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை நுழைவாயில் சோதனைகள் தொடர்கிறது

## -மன்னார் மக்கள் ஏமாற்றம்-

மன்னார் நுழைவாயில் கோட்டை பகுதியில் அமைந்துள்ள கடற்படையினரின் சோதனைச்சாவடியின் நடவடிக்கைகள் நிறுத்தப்படாமையானது மக்களை ஏமாற்றத்திற்குள் தள்ளியிருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் நுழைவாயில் அமைந்துள்ள கோட்டை காவலரணில் மேற்கொள்ளப்படுகின்ற சோதனை நடவடிக்கைகள் அனைத்தும் இம் மாதம் 10ஆம் திகதி முதல் நிறுத்தப்படும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான பஷில் ராஜபக்ஷ அறிவித்திருந்த போதும் அது இது வரையிலும் அமுலுக்கு வரவில்லை.

அமைச்சர் றிசாட் பதியுதீனின் அழைப்பின் பெயரில் இம் மாதம் 5ஆம் திகதி மன்னாரிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட பஷில் ராஜபக்ஷ மன்னார் நகர மண்டபத்தில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

இதன் போது மன்னார் நுழைவாயிலில் அமைந்துள்ள கோட்டை காவலரணில் மேற்கொள்ளப்படுகின்ற சோதனை நடவடிக்கைகள் அனைத்தும் இம் மாதம் 10 திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்படும் எனவும் அதற்கான பணிப்புரைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அறிவித்திருந்தார்.

ஆயினும் குறித்த தினமான இம்மாதம் பத்தாம் திகதி மேற்படி கோட்டை காவலரின் நடவடிக்கைகள் எதுவும் குறைவடையவில்லை எனவும் வழமைபோன்றே சோதனைகள் இடம்பெறுவதாகவும் தெரிய வருகின்றது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் முழுமையாக முடிவிற்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் மன்னார் நகரில் கடற்படையினரின் நடவடிக்கைகள் மக்களை வேதனைகளுக்குள் தள்ளுவதாகவே அமைந்திருந்தது.

இவரின் மேற்படி அறிவிப்பு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் மிகுந்த மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தது.

ஆயினும் அந்த மகிழ்ச்சி பொய்த்து விட்டதாகவும் வெறுமனே தேர்தல் கால வாக்குறுதிகளாக மாறிவிட்டதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

(2-6)

## ஐரோப்பாவில்

# புலிகளின் சொத்துக்களை முடக்குவதற்கு திட்டம்

## கெஹலிய ரம்புக்வெல

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச சொத்துக்களை முடக்கும் வகையில் ஐரோப்பாவில் இராஜதந்திர முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஐரோப்பாவின் சகல நாடுகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அரசாங்கப் பாதுகாப்புப் பேச்சாளர்கெஹலியரம்புக்வெல்லதெரிவித்துள்ளார்.

ஐரோப்பா முழுவதிலும் புலிகளின் சொத்துக்கள் காணப்படுவதாகவும் இது தொடர்பான மதிப்பீடுகளை அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்த அவர், குறித்த சொத்துக்களை எவ்வாறு அரசுடமையாக்குவது என்பது பற்றிய ஆலோசனைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப் படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

புலிகளின் சொத்துக்களை அரசாங்கத்தின் சிரேஷ்ட தலைவர்கள் சட்டவிரோதமான முறையில் பெற்றுக்கொள்ள முயற்சி மேற்கொள்வதாக வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## ஜனாதிபதித்தேர்தலில்

# பொன்சேகாவுக்கு ஆதரவாக இரண்டாயிரம் கூட்டங்கள்

## ஜே.வி.பி. திட்டம்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவு திரட்டும் வகையில் நாடு முழுவதிலும் சுமார் 2 ஆயிரம் கூட்டங்களை நடத்த ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் மாகாண , மாவட்ட மற்றும் பிரதேச வாரியாக இரண்டாயிரம் பிரச்சாரக்கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக ஜே.வி.பி.கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவு திரட்டும் வகையில் எதிர்க்கட்சி கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் எதிர்வரும் 18ஆம் திகதி கண்டியில் மாபெரும் பிரச்சார பேரணி ஒன்றை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியினால் நடத்தப்படும் 30 பிரச்சாரக்கூட்டங்களில் ஜெனரல் சரத்பொன்சேகா கலந்துகொள்ளவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (6-2)

## தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்

# உத்தியோகத்தர்களின் சலுகை விடயத்தில் தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதிக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித்தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சலுகைகள் வழங்கப்படக்கூடாது எனவும் அது தேர்தல் சட்டத்திற்கு புறம்பானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் ஊடாக தேர்தல் ஆணையாளர் இந்த விடயங்களை ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தினால் மதிய போசன விருந்து அளிக்கப்படவிருந்ததாகவும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தேர்தல் ஆணையாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் என ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் துறைமுக அதிகாரிகள் சந்திப்பு ஒன்றை நடத்த வேண்டும் எனவும் அந்தச் சந்திப்பு கட்டாயமானது எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அலரி மாளிகையில் விருந்துபசாரமொன்று வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச சொத்துக்கள் தேர்தல் பிரச்சாரங்களுக்காகப் பயன்படுத்தக் கூடாது என தேர்தல் ஆணையாளர் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளார். (2-6)

# ஈழத்துச் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில் சேர்.பொன்.இராமநாதன் (1851-1930)

01



பேராசிரியர்
கலைவாணி இராமநாதன்

### அறிமுகம்

உலகத்தில் உயர்ந்த பிறவி எடுத்த மக்கள் அனைவரதும் விருப்பம் நீடித்த துன்பியல் கலைப்பற்ற ஆனந்தம் தரும் ஒழுக்கவாழ்வியலை நாடுவதாகும். உலகில் எல்லா சமயங்களும் நல்லொழுக்கத்தை அடிநிலையாகக் கொண்டே அமைந்துள்ளன. அன்றியும் உலகின் முதற்பொருளாக என்றும் உள்ள பொருள் இறைவனே எனக் கொள்ளும் சமய நெறிகளுள் சைவசித்தாந்தம் முதன்மை யானது. உலகம், உயிர், இறை என்னும் முப்பொருள் உண்மையினை அறிவினடிப் படையில் கூடிய ஒழுக்க நெறியுடன் ஏற்றுக் கொண்டது சைவசித்தாந்தமாகும். சைவம், சித்தாந்தம் என்னும் சொற்றொடர்களில் 'சைவம்' என்பது உலக மக்களின் சமய வாழ்வியலையும் நம்பிக்கையினையும் நெறிப்படுத்தி நிற்பது எனவும், 'சித்தாந்தம்' என்பது சமகால அறிவுநிலைக்குரிய விமர்சனரீதியான அணுகுமுறையிலே அறிவாராச்சியியலை அத்திவாரமாகக் கொண்டு மனித நம்பிக்கையினை நெறிப்படுத்தி நிற்கும் மெய்யியல் எனலாம்.

சமயமெய்யியல் ஆய்வுகளில் அறிவினை மூலதனமாகக் கொண்ட சமுதாயத்திலே ஐதீகநிலையிலே காணப்பட்ட மரபுச் செய்திகளை அறிவுசார் நிலைக்கு எடுத்துச் செல்லுதலை உட்பொருளாகக் கொண்டது சைவ சித்தாந்தாந்தம். 'சைவம்' என்பது நம்பிக்கையுணர்வுசார் நெறி எனில் 'சித்தாந்தம்' அந்த நம்பிக்கையுணர்வினை அறிவு நிலையுடன் கூடிய மெய்யியற் சிந்தனையாக உருவாக்கம் செய்யும் முயற்சியின் செயற் திட்டமாகும். எனவே சைவசித்தாந்த மெய்யியலானது சமயவாழ்வையும் தத்துவ நெறியினையும் ஒன்றிணைக்கும் மெய்யியற் சிந்தனையானது சமயமும் தத்துவமும் ஒன்றினை ஒன்று நிறைவு செய்வன. இவை இரண்டும் இணைந்து செல்லும் சிறப்பு இந்திய மெய்யியலிற்கே குறிப்பாக சைவ சித்தாந்த தத்துவத்திற்கே உரியதாகும். இம் மரபு சமய நிலையிலும், தத்துவநிலையிலும், அறிவியல் நிலையிலும் அமைகின்றது. உலக கலாசார பண்பாட்டு வளர்ச்சியில் எழுபது கோடி மக்களின் வாழ்ந்த – வாழ்கின்ற – ஆன்மீக வாழ்வின் வடிவமே இந்து சமய தத்துவ மரபாகும் என்பது கீழைத்தேய ஞானியரைப் பற்றி நூல்கள் எழுதி நோபல் பரிசு பெற்றவரும்பிரெஞ்சுநாட்டவருமான றோமெயின் ரோலாண்ட் என்பாரின் கருத் தாகும்.

### சேர்.பொன். இராமநாதன் அவர்கட்கோர் முகவுரை

கீழைத்தேய ஆன்மீக சிந்தனையாளர் வரிசையில் சிறப்பிடம் பெற்று விளங்குபவர்களில் சேர்.பொன்.இராமநாதனும் ஒருவராவர். ஈழத்து சைவ மெய்யியற் சிந்தனை வளர்ச்சியில் சேர்.பொன். இராமநாதன் தமக்கென ஒருதனியான முத்திரை பதித்தவர். சைவ மெய்யியல் வளர்ச்சியில் மட்டுமன்றி அரசியல், விடுதலை, ஒருமைப்பாடு, கல்வி வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி, கலைப்பண்பாட்டு வளர்ச்சி, சமுதாய சீரமைப்பு என பல்துறை களி லும் ஆளுமையுள்ள ஒரு சித்தாந்த சிந்தனையின் சீரியவடிவமான ஒரு கர்ம யோகியாக விளங்கினார். 19 ஆம் நூற்றாண் டிலே தமது உயர்ந்த கொள்கைகள், பணிகள், மனித நேயம் என்னும் உதாரண குணங்களால் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி சகல இனத்தவர்கட்கும் உதவும் கரங்களாக பணிசெய்தார்.

1850 முதல் 1900 வரையுள்ள 50 ஆண்டு காலப்பகுதி ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் சுதேசிகள் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையாகக் காணப்பட்டது. 1851 இல் ஈழத் தமிழ் மக்கள் வாழ்வில் விடிவெள்ளி போலத் தோன்றிய சேர்.பொன். இராமநாதனின் வளர்ச் சியானது அவரை தமிழ் மக்களின் தலைவனாக, ஏழைகளின் நண்பனாக, இன மத வேறுபாடு கடந்த ஆற்றல் மிக்க அரசியல் வாதியாக, சைவப்பிரகாசராக, சித்தாந்த கோட்பாடுகளுக்கு இலக்கணமானவராக சர்வதேசத்தில் பெரும் புகழ் ஈட்டிக்கொடுத்தது. அவரது சைவசித்தாந்தம் தழுவிய வாழ்க்கைச் சிந்தனைகள் சமய கலாசாரப் பண்பு விருத்தி அனைத்தின் பதிவுகட்கும் அவர் வளர்க்கப்பட்ட குடும்பச் சூழலும் பிரதான காரணமாக அமைந்தது. தமது உலகியல் வாழ்வில் பிற்பகுதியில் ஒரு இல்லற ஞானியாகவே திகழ்ந்தார். யக்ஞவல்லியர், ஜனகர் போன்ற உபநிடத ரிஷிகளின் வாழ்வு போலவும் தமது வாழ்வினை அமைத்துக்கொண்டவர். பிற்காலம் அவரிடம் ஏற்பட்ட சமய சித்தாந்த மன வெழுச்சியானது அவரது தந்தையாரிடமிருந்தும் குடும்ப முன்னோர்களிடமிருந்தும் சுவீகரித்துக் கொள்ளப்பட்டதாகவே காணப்படுகின்றது. அவரது தந்தையார் பொன்னம்பல முதலியார் தமது குழந்தைகளுக்கு இலகுவில் பதியக்கூடியவாறு சிறந்த சமயக்கல்வி, சமய வாழ்வு என்பவற்றின் பயிற்சியையும் அளித்ததுடன் அவற்றுக்கு உதாரணமாக சமய வாழ்வும் வாழ்ந்து காட்டினார்.

எம்.வைத்திலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 'சேர்.பொன். இராமநாதன் வாழ்க்கை வரலாறு' பற்றிய ஆங்கில நூலில் அன்னாரது வாழ்வியல் சுவடுகள்,பதிவுகள் அனைத்தும் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இள வயதிலே இராமநாதனிடமிருந்து சமய சித்தாந்த வேட்கை யானது நாற்பது வயதெல்லை தாண் டியதும் ஆன்மீக தாகமாக மாறி அலை யலையாக அவற்றுள் அன்னாரை அள்ளிச் சென்றது. வேதநூல்கள், சைவாகமங்கள் முதலிய வட மொழி இலக்கியங்களை யும் கீழ் நாட்டு , மேல்நாட்டுப் புனி தத் திருநூல்கள் பலவற்றையும் கற்று ஆழமான அனுபவ ரீதியான ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இந்து மெய்யியலின் சகல பரப்புகளை வையும் நுட்பமாகப் பரிசோதித்து அவற்றின் ஆழத்தை கண்டறியவும் முயற்சி செய்தார். இக்கால கட்டத்திலே தான் அவரது வாழ்வையே மாற்றியமைக்கும் திறனுடைய- ஆத்மீக நியமத்தை ஒழுங்கு படுத்தி வளர்த் தெடுக்கும் ஞானியர் ஒருவரை அடைந்தார். அதன் பயனாக சேர். பொன். இராமநாதனின் அஞ்ஞானவிவேகத்தை அகற்றி மெய்ஞ் ஞானத்தை ஊட்டும் சற்குருவான குருநாதர் ஒருவர் வந்தடைந்தார். 'தேடச் சற்குருவும்வாய்க்கும்பராபரமே' தாயுமானவர் வாக்கிற் கேற்பவும் 'தெளிவு குருவின் திருமேனி காண்டல்... திருவார்த்தை கேட்டல்... குருவுரு சிந்தித்தல் தானே' என்னும் திருமூலர் கூற்றிற்கேற்ப வும் சேர்.பொன். அவர்கட்கும் அஞ்ஞான விவேகத்தை அகற்றி மெய்ஞ் ஞானத்தை வளர்க்கும் சற்குரு வாய்க்கப் பெற்றார். அப்பெரியவர், ஞானவான் என்பவர் சேர். பொன். இராமநாதனின் மருகராக அமைந்த சு.நடேசபிள்ளை அவர்களின் பேரனான தஞ்சாவூரைச் சேர்ந்த அருட் பரானந்த சுவாமிகளாவர். (தொடரும்)

---

## பிரபாகரன், பொட்டு மரணச்சான்றிதழ் விவகாரம்

## தேர்தல் நாடகத்தின் அடுத்த நகர்வே

### கொழும்பு ஊடகம் செய்தி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் புலனாய்வுத் துறை தலைவர் பொட்டு அம்மான் ஆகியோரின் மரணங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களை இலங்கை அரசு இந்திய அரசுக்கு அனுப்பியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புள்ளவர்கள் என சந்தேகிக்கப்படும் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், புலனாய்வுப் பிரிவு தலைவர் பொட்டு அம்மான் ஆகியோரின் மரணங்களை உறுதிப்படுத்துமாறு இந்தியா பல தடவைகள் இலங்கை அரசை கேட்டிருந்தது.

இருவரினதும் மரண அத்தாட்சிப் பத்திரங்களை தருமாறு இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன், முன்னாள் வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் இலங்கை அரசை கேட்டிருந்தனர்.

எனினும் பல நாட்களாக இழுத்தடிப்புக்களை செய்து வந்த இலங்கை அரசு அதனை தற்போது வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்மூலம் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு முடிவுக்கு வரலாம் என நம்பப்படுகின்றது.

இதனிடையே இலங்கையில் தற்போது தேர்தல் பிரச்சாரங்கள் எப்போதும் இல்லாதவாறு சூடு பிடித்துள்ளதால் இதுவும்இந்திய அரசும் இலங்கை அரசும் இணைந்து மேற்கொள்ளும் தேர்தல் நாடகம் என்ற கருத்துக்களும் எழுந்துள்ளன.

இதேவேளை தென்னிலங்கை சிங்கள வரை மகிந்தாவின் பக்கம் திருப்புவதற்கு இந்தியா தன்னால் முடித்த கீழ்த்தரமான செயற்பாடுகள் எல்லாம் செய்வதற்கு துணிந்து விட்டது என்று தமிழ் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (6)

---

## சந்திரிகா இலங்கை திரும்பினார்

(கொழும்பு)

ஐரோப்பாவுக்கு விஜயம் செய்திருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த 10 ஆம் திகதி இரவு இலங்கை திரும்பியுள்ளார்.

இலங்கை திரும்பியுள்ள அவர் எதிர்வரும் நாட்களில் முக்கிய அரசியல் தீர்மானங்களை எடுக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திரிகா பண்டாரநாயக்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கக்கூடும் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

---

## வடகொரியாவிலிருந்து ஆயுதவிமானம் இலங்கையை நோக்கி வரவில்லை

### அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

வடகொரியாவிலிருந்து ஆயுதங்களை ஏற்றி வந்த விமானம் இலங்கை நோக்கி வரவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

குறித்த ஆயுதவிமானம் தற்போது தாய்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை நோக்கி வந்தததாக வெளியான செய்திகளில் உண்மையில்லை எனவும் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

வடகொரியாவிலிருந்து இலங்கை நோக்கி குறித்த ஆயுத விமான பயணித்துக் கொண்டிருந்ததாக தாய்லாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எரிபொருள் நிரப்புவதற்காக தரையிறக்கப்பட்ட குறித்த விமானத்தை சோதனையிட்ட போது பாரியளவு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ள விமானிகள், உண்மையில் செல்ல வேண்டிய இடத்தை மூடி மறைப்பதற்காக தாம் இலங்கை நோக்கிச் செல்வதாக தெரி வித்திருக்கக் கூடுமென யூகம் வெளியிடப் பட்டுள்ளது. (6-2)

---

## அரச ஊடகங்களின் நடவடிக்கைகள் அதிருப்தி அளிக்கும் வகையில் உள்ளன


### சரத்பொன்சேகா குற்றச்சாட்டு




எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலை அடிப் படையாகக் கொண்டு அரச ஊடகங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருவதாக எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

அரச இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்களின்நடவடிக்கைகள் அதிருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளதாகவும், ஆளும் கட்சிக்கு சார்பாகவும எதிர்க் கட்சிகளை தாக்கியும் அநேக செய்திகள் வெளியிடப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அரசு ஊடகங்களில் கடமையாற்றும் ஊடக வியலாளர்கள் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிப்புத் தெரிவிக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறான செய் திகளால் அரச ஊடகங்கள் மீதானமக்களின் நன்மதிப்பு நாளுக்கு நாள் குறைவடைந்து செல்வதாகவும் தேர்தல் பிரச்சாரங்கள் ஊடகவியலாளர்களுக்கு ஏற்புடையதல்ல எனவும், தெரிவித்த அவர் அரசியல்வாதிகள் வருவார்கள் போவார் கள் எனினும் ஊடக தர்மத்தின் அடிப்படை யில் ஊடகவியலளர்கள் செயற்பட வேண்டு மெனக் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு அரச ஊடக நிறுவனங்களில் பணிபுரி வோருக்கு பொது மக்கள் வரி வருமானத்தின் ஊடாக சம்பளம் வழங்கப் படுவதாகவும், எந்தவொரு அரசியல் வாதி யின் குடும்பமோ பணம் வழங்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-2)







சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் 306 B1 உப ஆளுநர் லயன் ஜெயவர்த்சலம், முன்னாள் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் க.நடராஜா ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## கலைமலர் -2009 நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் "கலைமலர்-2009" என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு ரதிலஷ்மி மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் கலாசாலை அதிபர் மலர் சின்னையா வாழ்த்துரை வழங்குவதுடன், நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி வழங்கவுள்ளார். நூலின் முதற் பிரதியை இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ந.சீவரட்ணம் பெற்றுக்கொள்ளவுள்ளார். தொடர்ந்து நூல் மதிப்பீட்டுரையை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி செல்வி நி.நல்லையா வழங்கவுள்ளார். (ஓ-4)

## மீளக்குடியமர்ந்துள்ள தீவகமக்களுக்கு முதற் கட்ட கொடுப்பனவாக ரூ.5 ஆயிரம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து அண்மையில் சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தீவகப் பகுதி மக்களுக்கான முதற் கட்ட கொடுப்பனவுகள் நேற்று முன்தினம் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வழங்கப்பட்டன.

வேலணை பிரதேச செயலாளர் நந்தகோபாலன் தலைமையில் வேலணை மண்கும்பான் பிள்ளையார் கோவில் திருமண மண்டபத்திலும் புங்குடுதீவு சர்வோதய மண்டபத்திலும் நடைபெற்ற நிகழ்வுகளின்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அமைச்சர் இக்கொடுப்பனவுளை வழங்கினார்.

இதன்பிரகாரம் இம்மக்களுக்கு 5ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டன.

இங்கு உரைநிகழ்த்திய அமைச்சர், மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள இம் மக்களுக்கு 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் இத்தொகையானது எமது மக்களின் வாழ்க்கையை புதிதாக அமைத்துக்கொள்ளப்போதாது எனினும் தற்போது கிடைக்கும் தொகையைப் பெற்றுக்கொண்டு நாளடைவில் மேலும் பலஉதவிகள் நோக்கி முன்னகர முடியும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது மீளக்குடியமர்ந்துள்ள மகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தனித்தனியாகக் கேட்டறிந்துகொண்ட அமைச்சர், கூடிய விரைவில் இம் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளுக்கு வருகை தந்து அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதாகவும்,தேவைகளைப் படிப்படியாக நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்தார். (6)

## 'நாவலர் அருட்பாச்சம்பவம்' நூலின் மறுபிரசுர வெளியீடு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தையொட்டி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதிய "நாவலர் அருட்பாச் சம்பவம்" எனும் நூல் மறுபிரசுரம் செய்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் ஆலயச் சீர்திருத்தம் முதலியவைகளை சரித்திரத் தொடர்புகளுடன் தெளிவுபடுத்துவதுடன் ஆறுமுக நாவலரின் வாழ்வு தொடர்புடைய அருட்பா, மருட்பா சம்பவ வழக்குத் தொடர்பான விடயங்களையும் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது.

இந்நூலினைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சைவபரிபாலன சபை அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் என தேர்வுச் செயலர் இரா. செல்வவடிவேல் தெரிவித்துள்ளார். (ஓ-6-9)

## பரிகாரக் கற்பித்தல் செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான பரிகாரக்கற்பித்தல் செயலமர்வு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 22 ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு IA,IC பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் முன்பு நடைபெற்ற பரிகாரக் கற்பித்தல் செயலமர்வில் பங்குபற்றாத ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் இச் செயலமர்விற்கு பங்குபற்றவுள்ள ஆசிரியர்கள் இன்று திங்கட்கிழமை வடமராட்சி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராச தெரிவித்துள்ளார். (6-4-19)

## வீதியைத் துப்புரவு செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆனந்தகுமாரசாமி, பாலசிங்கம் விடுதிகளுக்கு அருகாமையிலுள்ள புகையிரதப் பாதையில் புல்லுகள், கழிவுப் பொருட்கள் மண்டிக்கிடப்பதாலும் பொதுமக்கள் தமது வீடுகளில் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களை இப்பகுதியில் கொட்டுவதாலும் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பதுடன் தொற்று நோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியால் பயணம் செய்யும் பல்கலைக்கழக விடுதி மாணவர்கள் , பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே உரியவர்கள் இப் பாதையை துப்புரவு செய்யுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (6-4)

## தீவகப் பகுதிகளுக்கான மின்மாற்றி செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகப் பகுதிகளில் சில பகுதிகளுக்கான மின்மாற்றி செயற்பாடுகள் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தீவகப்பகுதிகளுக்கு விஜயம் செய்த அமைச்சர் வேலணை துறையூர், சுருவில், புளியங்கூடல் வீதி, சரவணை, நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை வடக்கு ஆகிய பகுதிகளில் மேற்படி மின்மாற்றி செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

இம் மின்மாற்றம் செயற்பாடுகள் மூலம் பல பகுதிகளுக்கு மின்சார வசதிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் காலங்களில் இதுவரையில் மின்வசதி இல்லாத பகுதிகளுக்கு மின்வசதிகள் வழங்கப்படும் என அமைச்சர் உறுதியளித்துள்ளார். (6)




## இலங்கை அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவை நடத்தும் முப்பெரும் விழா

(யாழ்ப்பாணம்)

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் 22ஆம் ஆண்டு நினைவுநாளும், சுனாமி இயற்கை அனர்த்தத்தின் 5ஆம் ஆண்டு நினைவு நாளும், முன்னாள் அனைத்துலக எம்.ஜி.ஆர்.பேரவையின் தலைவர் பொன். மதிமுகராஜாவின் 11ஆம் ஆண்டு நினைவு நாளும் எதிர்வரும் 24,25,26 ஆம்திகதிகளில் முப்பெரும் விழாவாக நடத்துவதற்கு யாழ்ப்பாணம் அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவை விழா ஏற்பாட்டுக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முதலாம் நாள் நிகழ்வுகள் 24 ஆம் திகதி வியாழக்கிழமை தலைமைச் செயலகத்தில் மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வுகளுடன் குருநகர், பாஷையூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர்.சிலைக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆண்களுக்கான 40 மைல் துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி, பெண்களுக்கான 15 மைல் துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, 25 வயதுக் குட்பட்ட ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டப்போட்டி, 8 மைல் மூன்று சில்லு சைக்கிள் றிக்சா ஓட்டப்போட்டி மற்றும் கழகங்களுக்கான கயிறு இழுத்தல் போட்டிகள் என்பன நடைபெறவுள்ளன.

முப்பெரும் விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் 26 ஆம்திகதி சனிக்கிழமை தாவடி ஸ்ரீ அம்பலவாணர் கந்தசுவாமி ஆலய முன்றலில் மாலை 4.30 மணிக்கு அனைத்துலக எம்.ஜி.ஆர்.பேரவைத் தலைவர் பொன். மதிமுகராஜா விஜயகாந்த் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகி மங்கல இசை, தமிழ் மரபிசை, நினைவுப்பேருரை, எம்.ஜி.ஆர். விருது வழங்குதல், கவியரங்கு, பட்டிமன்றம், கரகாட்டம், நாடகம், நடனம், வில்லிசை, மெல்லிசை, இசையமுதம், தமிழினச் சட்டமன்றத்தில் விவாதம் போன்ற நிகழ்வுகளுடன் இவ்வாண்டு விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில பங்குபற்ற விரும்புவர்கள் எதிர்வரும் 20 ஆம்திகதிக்கு முன்னர் விண்ணபப்படிவங்களை தலைமைக் காரியாலயத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

போட்டிகளில் வெற்றிபெறும் வீரர்களுக்கு எம்.ஜி.ஆர். தங்கப்பதக்க விருது வழங்கப் படவுள்ளது.

பங்குபற்றுபவர்கள் மேலதிக விபரங்களுக்கு கொக்குவில் தாவடியில் அமைந்துள்ள அனைத்துலக எம்.ஜி.ஆர்.பேரவை தலைமைக் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6-9)

## ஐந்தாவது ஆண்டில் காலடி பதிக்கும் யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு இன்று ஐந்தாவது ஆண்டில் காலடி பதிக்கிறது. இச் சிகிச்சையானது, 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ளக சிகிச்சைப் பிரிவின் 26 ஆம் விடுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதுவரை புற்றுநோய் சிகிச்சைக்காக 16 ஆயிரத்து 241 பேர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட்ட தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் கதிர்வீச்சு சிகிச்சை ஆரம்பமாகி இதுவரை 1903 பேர் கதிர்வீச்சு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதற்கு முன்னர் நோயாளிகள் மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுவந்தனர்.

இச்சிகிச்சைப் பிரிவுகளில் வசதியீனங்கள் குறைவாக இருப்பதனால் பண்ணைப் பிரதேசத்தில் இதற்கென ஒதுக்கப்பட் காணியில் சகல வதிகளுடனான புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை அமைத்துத் தருமாறு யாழ்.வந்த சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (6-2)

# 2009 ஆம் ஆண்டின் உலக அழகி



(ஜோகனஸ்பார்க்)

ஜிப்ரால்டர் நாட்டைச் சேர்ந்த கைனே அல்டோரினோ 2009 ஆம் ஆண்டுக்கான உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா, ஜோகனஸ்பார்க் நகரில் நடந்த உலக அழகிப்போட்டியில், இந்தியாவைச் சேர்ந்த பூஜா சோப்ரா உட்பட, 112 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் பங்கேற்றனர். இதில், ஐரோப்பாவில் உள்ள ஜிப்ரால்டர் நாட்டைச் சேர்ந்த கைனே அல்டோரினோ, உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அவருக்கு உலக அழகிக்கான பட்டம் சூட்டப்பட்டது.

இருபத்திரண்டு வயதாகும் கைனே அல்டோரினோ , மனிதவள மேம்பாட்டுத் துறையில் பணியாற்றி வருகின்றார். உலக அழகிப்பட்டம்வென்றபின், கண்களில் கண்ணீர்மல்க " நன்றிதென்னாபிரிக்கா "என நெகிழ்ந்தார்.

இந்தப் போட்டியில், மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த பெர்லா பெல்ட்ரான் இரண்டாவது இடத்தையும், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த டட்டும் கேஷ்வர் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இந்த ஆண்டுக்கான உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கைனே அல்டோரி னோவுக்கு, கடந்த ஆண்டு உலக அழகிப்பட்டம் வென்ற ரஷ்ய அழகியான கெனியாசுகி நோவா, உலக அழகி மகுடத்தை சூட்டினார்.

இப்போட்டியின் நடுவர்களில் ஒருவராக, இந்தியாவைச் சேர்ந்த முன்னாள் உலக அழகி பிரியங்கா சோப்ரா பங்கேற்றார். (6-2)

# புஷ்ஷுக்கு மிரட்டல் விடுத்த இந்தியருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை

## அமெரிக்காவில் சம்பவம்

(சிகாகோ)

அமெரிக்க முன்னாள் அதிபர் புஷ்ஷுக்கு மிரட்டல் விடுத்த இந்தியர் விக்ரம் புத்திக்கு, ஐந்து ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தைச்சேர்ந்த கடற்படை முன்னாள் கப்டன் சுப்பாராவின் மகன் விக்ரம் புத்தி(38). அமெரிக்காவின் பர்டியூ பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி படித்து வந்தார். இவர் 2006 ஆம் ஆண்டு இன்டர்நெட் மூலமாக முன்னாள் அதிபர் புஷ் மற்றும் துணை அதிபர் டிக்செனி மற்றும்அவர்களது மனைவிமாருக்கு கொலை மிரட்டல் விடுத்தார். அமெரிக்காவின் முக்கிய இடங்கள் குண்டு வைத்துதகர்க்கப்படும் எனவும் கூறியிருந்தார். இது தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இன்டியானா நீதிமன்றில் இந்த விசாரணை நடைபெற்று வந்தது. விக்ரம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திறமையாக வாதாடாததால், அவரை குறை கூறினார் விக்ரம். இரண்டாவது சட்டத்தரணி மீதும் அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

இதனால், இந்த வழக்கு விசாரணை தள்ளிப் போனது. இதற்கிடையே, கடந்த வாரம் நீதிமன்றில் ஆஜரான விக்ரம், தானே வாதாடினார். இருப்பினும் இன்டியானா நீதிமன்ற நீதிபதி ஜேம்ஸ் மூடி, இவருக்கு நான்கு ஆண்டுகள் மற்றும் ஒன்பது மாத கால தண்டனையை உறுதி செய்தார். தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை குறைக்கும்படி, விக்ரம் வாதாடினார். ஏற்கனவே சிறையில் கழித்த தண்டனைக் காலம் இந்தத் தீர்ப்பில் வழங்கப்பட்ட தண்டனைக்காலத்திலிருந்து கழிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. தனக்கு வழங்கப்பட்ட சிறைத்தண்டனையை எதிர்த்து சிகாகோ நீதிமன்றில் மேல் முறையீடு செய்ய விக்ரம் திட்டமிட்டுள்ளார். தண்டனைக் காலம் முடிந்து அவர் மூன்றாண்டு காலம் கண்காணிக்கப்பட்டு பின்னர் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளார். (2-6)




# வெள்ளை மாளிகை விருந்தில் புகுந்த தம்பதிகளுக்கு அழைப்பாணை

(வோஷிங்டன்)

பிரதமர் மன்மோகன்சிங்குக்கு வெள்ளை மாளிகையில் கடந்த நவம்பர் 24 ஆம் திகதி ஒபாமா விருந்து அளித்தார். அப்போது, விருந்துக்கு அழைக்கப்படாத தாரேக் - மிச்சேல் என்ற தம்பதி, அத்துமீறி உள்ளே புகுந்தனர். இந்தப் பாதுகாப்பு குறைபாடு, சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், தாரேக்-மிச்சேல் தம்பதியிடம் விசாரணை நடத்த அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புக்கான பாராளுமன்ற கமிட்டி ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, ஜனவரி 20 ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு குறித்த தம்பதியருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (ஓ-2-6)


# பறிக்கப்பட்ட பரிசு திருப்பிக் கொடுக்கப்பட்டது

(ஒஸ்லோ)

ஈரான் நாட்டில் மனித உரிமைக்காக போராடி வரும் ஷிரின் எபாடி என்ற பெண்ணுக்கு கடந்த 2003 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அவர் சில மாதங்களுக்கு முன்பு, ஈரான் அரசின் கெடுபிடிக்கு உள்ளானார். இதனால் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலுக்கு முன்பே, ஈரானை விட்டு வெளியேறினார். அவருக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசை ஈரான் பறித்துக்கொண்டு விட்டதாக நோபல் பரிசு வழங்கும் நோர்வே நாடு குற்றம் சாட்டியது.

இந்நிலையில், அந்த நோபல் பரிசை நோர்வேக்கு ஈரான் திருப்பி அனுப்பியுள்ளது. அதை ஷிரின் எபாடியிடம் நோர்வே திரும்ப ஒப்படைத்துள்ளது. (ஓ-2-4)

# சூரியனை நோக்கி சுழலும் வீடு அவுஸ்திரேலிய தம்பதியின் புதிய அனுபவம்



(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் சூரியன் இருக்கும் திசையை நோக்கி சுழலக்கூடிய வீட்டை ஒரு தம்பதி கட்டியுள்ளனர். அதற்கு ரூ. 4 கோடி செலவாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தை சேர்ந்த தம்பதி லூக், டெபி இவர்கள் சொந்த வீடு கட்டத் திட்டமிட்ட போது, வீட்டுக்குள் எப்போதும் சூரிய வெளிச்சம் படும்படி கட்ட முடிவு செய்தனர்.

இதற்காக வீட்டின் நடுப்பகுதியில் அத்திவாரம் அமைத்து, சுழலும் வகையில் பிரமாண்டமான அச்சாணி அமைத்தனர். அதை மோட்டார் மூலம் வீட்டுக்குள் சுவிட்ச் கட்டுப்பாட்டில் இணைத்தனர்.. வீட்டில் விசாலமான ஜன்னல்கள், கதவுகளுடன் 3 படுக்கையறைகள், 02 குளியல்றைகள், சமையலறை, அலுவலக அறை, வரவேற்பறை அமைத்தனர்.

ஒட்டுமொத்த வீட்டையும் அச்சாணியுடன் சலாது இயந்திரம் மோட்டார் அளவில் 2 மோட்டார்கள் மூலம் இணைத்தனர். அதன் கட்டுப்பாட்டை ஹோலில் வைத்துள்ளனர். அதில் வீடு சுழல வேண்டிய நேரத்தை முன் கூட்டித் தயார் செய்யலாம். அல்லது வேண்டும் போது கைகளால் பட்டனை அழுத்தியும் நகரச் செய்யலாம். சூரியன் உச்சிக்கு நகர்ந்து மேற்கே செல்லச் செல்ல வீடும் சூரியகாந்திப் பூவைப் போல மெதுவாக திரும்பிக் கொண்டிருக்கும்.

அதாவது காலை 6 மணிக்கு கிழக்கில் இருந்த வாசற்படி, மாலை 6 மணிக்கு மேற்காகி இருக்கும். இதன்மூலம் , சூரிய ஒளியை வீட்டில் 12 மணி நேரமும் படச் செய்ய மு டியும். சோலார் ஒளியில் இயங்கும் கருவிகளை எளிதாக மின்னேற்றிக் கொள்ள முடியும். வீட்டுக்குள் பகலில் மின்சார விளக்குகள் தேவைப்படாது என்பதால் மின் சிக்கனம் ஏற்படும் என்று லூக், டெபி தம்பதியினர் தெரிவித்தனர்.

எங்கள் வீடு ஒரு மஜிக் வீடு. வெயில், மழை, காற்று என காலநிலைக்கேற்ப வீட்டைத் திருப்பிக் கொள்ளலாம். வரவேற்பறையில் அமர்ந்து காலை முதல் மாலை வரை சூரிய வெளிச்சத்தை ரசிக்க முடியும். வீடு நகரும் உணர்வை பொறுத்துக் கொள்ளத் தயாராக இருந்தால் இதுபோன்ற அனுபவம் சாத்தியமே என்று லூக் தெரிவித்தார். (ஓ-6-2)

# விவாகரத்தின் பின் சேர்ந்து வாழ்ந்த தம்பதியினருக்கு சிறைத்தண்டனை

## ஸ்பெயினில் சம்பவம்

(மாட்ரில்)

ஸ்பெயினில் விவாகரத்து பெற்ற தம்பதி மீண்டும் ஒன்று சேர்ந்ததால், நீதிமன்ற ஆணையை மீறியதற்காக அவர்களுக்கு ஸ்பெயின் நீதிமன்றம் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

ஸ்பெயினின் தெற்குக் கடலோரப் பகுதியில் உள்ள அண்டலூசியை அடுத்த மாட்ரில் நகரைச் சேர்ந்த இந்தத் தம்பதி, கருத்து வேறுபாடு காரணமாக நீதிமன்றத்தை அணுகி விவாகரத்து கோரினார். விசாரணையில் கணவன், மனைவியை துன்புறுத்தியது தெரியவந்தது.

இதையடுத்து, நீதிமன்றம் இவர்களுக்கு கடந்த 2008 ஆம் ஆண்டு விவாகரத்து வழங்கியது. மேலும் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ், மனைவியை எந்த விதத்திலும் தொடர்புகொள்ளக்கூடாது என்றும், சந்திக்கக்கூடாது என்றும் கணவனுக்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது. இதையடுத்து கடந்த ஓராண்டாகப் பிரிந்திருந்த இந்த தம்பதிக்கிடையே மீண்டும் காதல் மலர்ந்துள்ளது. இதனால் ஒன்றுசேர்ந்து வாழ முடிவு செய்து வாழ்க்கையை தொடர்ந்தனர்.

இதை அறிந்த நீதிமன்றம், நீதிமன்ற ஆணையை மீறிய அவர்களை கைது செய்ய உத்தரவிட்டது. இதன் அடிப்படையில் சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் இந்த தம்பதியை கைது செய்தனர். தாங்கள் இருவரும் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றுசேர்ந்து வாழ விரும்புவதாக தெரிவித்த போதிலும் அதை நீதிமன்றம்ஏற்கவில்லை. கணவனுக்கு 6மாத சிறை தண்டனையும், மனைவிக்கு 4 மாத சிறைத்தண்டனையும் விதித்துள்ளது. (6-2)

# புதிய 'விர்டொப்சி' முறையின் மூலம் உடலை வெட்டாமல் பிரேத பரிசோதனை

## சுவிற்சர்லாந்தில் சாதனை

(பெர்னே)

சுவிற்சர்லாந்து நாட்டில் ஒப்டிகல் 3 டி ஸ்கேனர் என்ற புதிய வகை கருவி மூலம் உடலை வெட்டாமல் பிரேத பரிசோதனை செய்கின்றனர்.

சுவிற்சர்லாந்தின் பெர்னே பல்கலைக் கழகத்தை சேர்ந்த மைக்கேல் தாலி மற்றும் அவரது குழுவினர் பிரேத பரிசோதனை செய்ய ஒப்டிகல் 3டி ஸ்கேனர் கருவியைக் கண்டு பிடித்துள்ளனர். இந்த முறைக்கு விர்டொப்சி எனப் பெயரிட்டுள்ளனர். இந்த கருவி மூலம் பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய உடலை வெட்டாமல் அப்படியே சோதனை செய்து இறப்பிக்கான காரணத்தை கண்டறியலாம்.

இது குறித்து பேராசிரியர் மைக்கேல் தாலி கூறியதாவது,

பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய உடலை வெட்டாமல் இந்த ஸ்கேனர் கருவி மூலம் 60 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான காயங்கள் மற்றும் இறப்பிற் கான காரணம் ஆகியவற்றை கண்டறிகிறோம். இந்த ஸ்கேனர் மூலம் கண்டறியப்படும் தகவல்கள் நிரந்தரமான ஆவணமாக இருக்கும். இதை இன்டர்நெட் மூலம் பகிர்ந்து கொள்ள முடியும் இந்த முறையில் பிரேத பரிசோதனை செய்ய 30 நிமிடங்கள் மட்டுமே ஆகும்.

ஒரு மேசையின் மேல் பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய உடலை வைத்து ஸ்கேனரின் ரோபாட்டிக் கைகள் மூலம் பரிசோதிக்கப்படும் . இரண்டு தொழில்நுட்ப வல்லுனர்கள் கம்ப்யூட்டரை பயன்படுத்தி காரணத்தை கண்டறிவர் இதில் சி.டி.ஸ்கேனர் எலும்பில் ஏற்பட்டிருக்கும் காயங்களைக் கண்டறியும். எம்.ஆர்.ஐ.ஸ்கேன் மென்மையான திசுக்களில் ஏற்பட்டிருக்கும் காயங்களை கண்டறியும். இவ்வாறு மைக்கேல் கூறினார். (6)

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 15-12-2009 முதல் 21-11-2010 வரை

## மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள் வரை**

**அடுத்தவர்களுக்கு யோசனை சொல்வதில் அசகாயசூரர்கள் என்று பெயர் பெற்ற மிதுன ராசி நேயர்களே!**

நீங்கள் மாற்றங்களை அடிக்கடி விரும்புபவர்கள். நல்ல மாற்றம் எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த உங்களுக்கு கார்த்திகை மாதம் வரும் குருப்பெயர்ச்சி கைநிறையப் பொருள் குவிய வழிகாட்டப் போகிறது. கல்யாணக் கனவுகளையும் குருவின் நேரடிப் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் நற்பலன்கள் அனைத்தும் உங்களை நாடி வரப் போகிறது. ஒப்பற்ற வாழ்க்கைக்கு அத்திவாரம் இடம் போகிறீர்கள்.

7, 10க்கு அதிபதியான குருபகவான் உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்தில் உலா வரும் பொழுது இன்பங்கள் மட்டுமே உங்கள் இல்லம் தேடி வரும் என்பது ஜோதிட நியதி. மேலும் நற்பலன்களை நீங்கள் பெற குருப் பெயர்ச்சிக்கு முன்னதாகவே குருவழிபாட்டை மேற்கொள்வதோடு குரு ஹோமங்களில் கலந்து கொண்டு நீங்கள் புனிதமடையலாம்.

உங்கள் ராசிக்கு 7,10க்கு அதிபதியான குருபகவான் 9ஆம் இடத்தில் சஞ்சரித்து உங்கள் ராசிக்கு1, 3, 5 ஆகிய இடங்களைப் பார்க்க போகிறார். சில மாதங்கள் கழித்து அதிச்சாரமாக மீனத்திற்குச் செல்லும் பொழுது 2,4,6ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார்.

கேந்திராதிபத்ய தோஷத்திற்கு அதிபதியான குரு , உங்கள் ராசியைப் பார்க்கும் பொழுது நன்மை செய்யுமா? என்று நீங்கள் நினைப்பீர்கள். பகைவனாக இருந்தாலும் பாதத்தில் விழுந்தால் முகமலர்ச்சியோடு நம் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பார் என்பது முன்னோர்கள் வாக்கு. அந்த அடிப்படையில் முறைப்படி குருவைக் கும்பிடுவோம் ! முன்னேற்றம் கண்டு மகிழ்வடைவோம்.

**பிறரால் சாதிக்க முடியாததை சாதித்து காட்டுவீர்கள்!**

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு அதில் ஆதாயமும் பெற்றுக் கொள்வீர்கள் . கொடுத்த வாக்கை உங்களால் காப்பாற்ற முடியுமா? என்பது சந்தேகம் தான். எனவே யாருக்கும் வாக்குக் கொடுப்பதற்கு முன்பு ஒரு கணம் யோசிப்பது நல்லது.

பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பினாலும் சேமிப்பு என்பது உங்களுக்கு சிறிதளவும் இருக்காது. சில காரியங்களை சிந்திக்காமல் செய்து விட்டு தவறாக இருந்தாலும் செய்தது சரிதான் என்று வாதிடுவீர்கள்.

மற்றவர்களுக்கு வலியச் சென்று உதவுவதில் வல்லவர்கள். உங்கள் மீது யாராவது குறை சொல்லி விட்டால் மனக் குமுறலை வெளிப்படுத்தவும் தயங்க மாட்டீர்கள். ஒரு காரியத்தை முடிக்க நினைக்கும் பொழுது முதலில் அன்பாக பேசிப்பார்ப்பீர்கள் . அப்படியும் காரியம் நடைபெறாவிட்டால் ஆரவாரம் செய்து அதட்டியாவது காரியத்தை முடித்து விடுவீர்கள்.

திட்டங்கள் தீட்டுவதில் வல்லவர்களாக விளங்கும் உங்களுக்கு தொழில் ஸ்தானம் எனப்படும் 10ஆம் இடம் முக்கியமான இடமாகும். அந்த இடம் நன்றாக இருந்தால்தான் நிரந்தர வருமானத்திற்கு வழி கிடைக்கும். அந்த இடத்திற்கு அதிபதியான குருவை பெயர்ச்சியாவதற்கு முன்னதாகவே வரவேற்றுக்கொண்டாடி மகிழ்வதோடு அதற்குரிய ஹோமங்களில் கலந்து கொண்டு அதில் தரும் பொருள்களை பயன்படுத்தினால் வாழ்க்கையில் வளர்ச்சி கூடும்.

உங்கள் ராசிக்கு 7 ,10ஆம் அதிபதியான குருபகவான் 9ஆம் இடத்தில் சஞ்சரித்து உங்கள் ராசிக்கு 1,3,5 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். குரு பார்க்கக் கோடி நன்மை என்பதற்கிணங்க தினமும் கொண்டாட்டமும் குதூகலமும் உங்கள் குடும்பத்தில் வந்து சேரும்.

6 மாதம் கழித்து திண்டாட்டம் என்றதும் நீங்கள் பயப்பட வேண்டாம். 10இல் வரும் குருவால் பதவி மாற்றம், ஊர் மாற்றம், இடமாற்றம், இலாகா மாற்றம் என்று ஏதாவது ஒரு மாற்றம் வந்து கொண்டேயிருக்கும். திண்டாட்டத்தை கொண்டாட்டமாக மாற்ற வண்டாடும் மலரை குருவுக்குச் சூட்டி வாசனைத் திரவியங்களால் அபிஷேகம் செய்து பாருங்கள்!

15.12.2009 முதல் 04.05.2010 வரை மீண்டும் 08.11.2010 முதல் 21.11.2010 வரை கும்பத்தில் குரு சஞ்சரிக்கப் போகிறார். இடையில் அதிச்சாரமாக 05.05.2010 முதல் 07.11. 2010 வரை மீன ராசியில் சஞ்சரித்து அங்கேயே வக்ரமும் பெறுகிறார். வக்ர காலத்தில் வளர்ச்சி ஏற்பட சுய ஜாதக ரீதியாக ஆராய்ந்து முறையாக யோகபலம் பெற்ற நாளில் பலமிழந்த கிரகங்கள் பலம்பெற வழிபாடு செய்வது நல்லது.

***ஒன்பதில் குருவும் நின்றால் உயர்வுகள் வந்து சேரும்! நண்பர்கள் ஒத்துழைப்பால் நலம்யாவும் வந்து கூடும்!***

***இன்பத்தின் எல்லை காணும் இனியதோர் வாழ்வு கிட்டும்! பொன்னான தொழில்கள் வாய்க்க புதுப்பாதை அமையும் உண்மை!***

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் உயர்வுகளே அதிகம் வந்து சேரும். தங்கம், வெள்ளி தாராளமாகப் புழங்கும், மங்கல ஓசை மனையில் கேட்கும் . தொழில் வளர்ச்சி கூடும். தொகை எதிர்பார்த்தபடியே வந்து சேரும். உத்தியோக உயர்வும் ,ஊதிய உயர்வும் உங்களை ஆச்சரியப்பட வைக்கும்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

குருவின் பார்வை பதியுமிடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. உங்கள் ராசியைக் குரு பார்ப்பதால் உடல் நலம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். ரண சிகிச்சை மூலம் குணமாக வேண்டிய நோய்கள் கூட சாதாரண சிகிச்சை மூலமே குணமாகிவிடும். கடன் சுமை குறைந்து கவலைகள் ஓயும்.

குருவின் பார்வை சகோதர ஸ்தானத்தில் பதிவதால் உடன்பிறப்புகள் உற்சாகத்தோடு வந்திணைந்து உதவிக்கரம் நீட்டுவார். சகோதரப் பகை மாறி சந்தோஷம் கூடும். அண்ணன் என்னடா... தம்பி என்னடா.. அவசரமான உலகத்திலே என்று சொல்லிய நீங்கள் இனி அவசரத்திற்குக் கை கொடுத்து உதவுபவர்கள் அண்ணன் தம்பிகள்தான் என்று சொல்லப் போகிறீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும்.

குருவின் பார்வை 5ஆம் இடத்தில் பதிவதால் புத்ர ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம், வலுவடைகிறது. எனவே பெற்றோர் வழிச் சொத்துக்களை பிரித்துக் கொடுப்பதில் இருந்த தடை அகலும் .வீடு கட்டிக் குடியேற வேண்டுமென்ற ஆசை நிறைவேறும்.

பெண் குழந்தைகளுக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை நகை அணிந்து மணக்கோலம் காண வழி வகுப்பீர்கள் .அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பு கிட்டும். உதிரி வருமானங்கள் பெருகும். பிள்ளைகளின் கல்வி முயற்சிக்கும் , கடல் தாண்டு முயற்சிக்கும் வழி வகுப்பீர்கள்.

இலாபம் அதிகரிக்கும். இந்த நேரத்தில் புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுபவர்கள் யார் பெயரில் தொழில் செய்தால் நல்லது? என்பதை சுய ஜாதக ரீதியாக ஆராய்ந்து தேர்ந்தெடுத்து, அதிர்ஷ்ட எண்களின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் தொழில் நிலையத்தின் பெயரை யும் அமைத்துக் கொண்டால் வளர்ச்சி மேல் வளர்ச்சி கூடும். வருமானம் திருப்தி தரும்.

**மீன குருவின் பார்வையால் ஏற்படும் பலன்கள்**

உங்கள் ராசிக்கு 10ஆம் இடமான மீனத்தில் மே 5ஆம் திகதி முதல் நவம்பர் 7ஆம் திகதி வரை சஞ்சரிக்கப் போகிறார். 10க்கு அதிபதி 10இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பணத் தேவைகள் பூர்த்தியாகும். பதவி மாற்றங்கள் உருவாகும். மனதில் நினைத்த காரியங்கள் மளமளவென்று செய்து முடிப்பீர்கள்.

குருவின் பார்வை பலத்தால் குடும்பத்தில் அமைதி கூடும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். கூட்டு முயற்சிகளில் இருந்து விடுபட்டு தனித்தியங்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். தாயின் உடல்நலம் சீராகும். தக்கவித்தில் வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள வள்ளல்களின் உதவி கிடைக்கும். ஆனால் அத்தனையும் சிறப்பாக நடைபெற பார்க்கும் குருவை நீங்கள் பலப்படுத்த வேண்டுமல்லவா ! எனவே வியாழன் தோறும் தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது.

உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை குறைய வழி பிறக்கும். ஏமாற்றிய எதிரிகளே உங்களை வந்து சரணடைவர்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம் !**

**(16.07.2010முதல் 07.11.2010 வரை )**

உங்கள் ராசிக்கு 7, 10க்கு அதிபதியான குரு வக்ரம் பெறுவது நன்மை தான். பிரிந்த தம்பதியர் இணையும் வாய்ப்பு கிட்டும்.


பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும் தொகை வருவதில் ஏற்பட்ட தடை அகல தெசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**ஜோதிடக் கலைமணி**
**சிவல்புரி சிங்காரம்**

மிதுன ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி மிகுந்த யோகத்தைக் கொடுக்கும். பொருளாதார வசதி பெருகும். மனத்திற்குப் பிடித்த மணவாளன் வந்து சேர்வர். புகழ் பெற்றவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து காரியங்களை முடித்துக் கொடுப்பர். சுய ஜாதகத்தில் குருவின் பலமறிந்து குறிப்பிட்ட பரிகாரங்களைச் செய்தால் வளர்ச்சி கூடும்.

கும்ப ராசியில் சஞ்சரிக்கும் குருவால் சந்தோஷங்களை நாளும் சந்திக்க யோக தட்சிணா மூர்த்தியை வழிபட்டு வாருங்கள்! வருங்காலம் சிறப்பாக அமையும்! .

(தொடரும்)



கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலய குருளைச் சாரணர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வில் அதிபர் இ.ரவீந்திரன், சாரணிய பொறுப்பாசிரியை திருமதி இ.சந்திரசேகரம், சாரண ஆணையாளர் கலாநிதி மா.புவனேந்திரன், சாரண உதவி மாவட்ட ஆணையாளர் திருமதி ஆர்.ஜே.பி. சேவியர் , மாவட்ட சாரண ஆணையாளர் செ. சுப்பிரமணியம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா வித்தியாலய சாரணபொறுப்பாசிரியர் கு.சுமுகலிங்கம் மற்றும் குருளைச்சாரண மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# முக்கிய பிரமுகர்களிற்கான புதிய கப்பல் சேவை

## கடற்படை தளபதி ஆரம்பித்து வைத்தார்

(கொழும்பு)

முக்கிய பிரமுகர்களுக்கான கப்பல் சேவை ஒன்றை இலங்கை கடற்படை ஆரம்பித்துள்ளது. அதன் ஆரம்ப விழாவை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் திசேரா சமரசிங்கா சென்ற வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கை கடற்படையின் 59 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இந்த சேவையை கடற்படை ஆரம்பித்துள்ளது. ஆடம்பர வசதிகள் நிறைந்த இந்த புதிய கலம் வெலிசர பகுதியில் உள்ள கடற்படை தளத்தில் கட்டப்பட்டது.

51அடி நீளமும் 11அடி அகலமும் கொண்ட இது 3,500 குதிரைவலு சக்தி உடைய இயந்திரம் கொண்டது. குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைக்காட்சிகள், சினிமா வசதிகளையும் கொண்டது.

14 பயணிகள் செல்லும் வசதிகளை கொண்ட இந்த கப்பலில் 11 கடற்படையினர் பணியாற்றுவடன் 28 கடல்மைல் வேகத்தில் அது பயணிக்கத்தக்கது.

இதேவேளை இலங்கை கடற்படையினர் உட்கரையோர சுற்றுக்காவலர் தாக்குதல் படகுகளான அரோ படகுகளையும் வடிவமைத்து வருவது குறிப்பிடத்தக்கது. (2-6)

# விஜயநகரப் பேரரசுக் கால சமய நூல்கள் (கி.பி.1100-1700)

77

குமரகுருபரர் காசியில் தங்கி ஒரு மடத்தை ஏற்படுத்தினார். அது இன்னும் உள்ளது. அப்போது தில்லியை ஆண்ட முகலாய அரசரிடம் பேசி அவருடைய உதவி பெற முயன்றார். அதற் காக இந்துஸ்தானி மொழி கற்கக் கலைமகளின் அருளை வேண்டிச் சகல கலாவல்லி மாலை பாடினார்.

வடநாட்டில் தங்கியிருந்த போது கம்ப ராமாயணத்தை இந்துஸ்தானியில் விளக்கிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். வேறு புராணப் பிரசங்கங்களும் சைவசமய உபதேசங் களும் நிகழ்த்தினார். காசியைப் புகழ்ந்து கலம்பகம் இயற்றினார். காசியிலே முத்தியும் பெற்றார். அவர் இயற்றிய மற்றொரு பிள்ளைத்தமிழ் நூல் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் என்பது. குறத்தி தெய்வ அருள்பற்றிக் குறிசொல்லும் முறையில் அமைந்தது மீனாட்சியம்மை குறம் என்பது. அவருடைய எந்த நூலிலும் கற்பனை வளம் காணலாம். இனிய ஓசைநயமும் பொருட்சுவையும் காணலாம்.

நீதிகளைச் சொல்லுவதிலும் தெளிவும் திறனும் உடைய புலவர் என்பதை அவருடைய நீதி நெறிவிளக்கம் என்னும் நூலில் காணலாம். அது 120 வெண்பாக்களால் ஆகியது. உவமைகள் நிரம்பியது.

காப்பியங்களும் புராணங்களும் வளர்ந்த பின், இயற்கையின் அழகை உள்ளவாறு எடுத்துக்கூறும் சொல்லோவியங்கள் குறைந்து, உயர்வு நவிற்சியாகப் புனைந்து கூறும் வருணனைகள் மிகுந்தன. சங்ககால இலக்கியத்தில் வாழ்வில் கண்டவற்றை விளக்கிக் கூறும் அழகிய சொல்லோவியங்களே பெரும்பாலும் காண்கிறோம். ஒரு சில இடங்களில் உயர்வு நவிற்சிகளும் காணப்படுகின்றன. அவைகளும் உள்ளவற்றை உணர்ச்சியோடு கூறும் காரணத்தால், மிகைப்படுத்திக் கூறுவனவாக உள்ளனவே அல்லாமல், இல்லாதவற்றைப் புனைந்து கூறும் வருணனைகளாகவோ உள்ளவற்றை அளவு கடந்து புனைந்துரைக்கும் வெறும் கற்பனைகளாகவோ இல்லை.


பிறகு எழுந்த காப்பியங்களில் இந்த நிலை சிறிது மாறியது. உள்ளவற்றை அழுத்தமாக வற்புறுத்திக் கூறுவதற்காக அமையும் உயர்வு நவிற்சிகள் மட்டும் அல்லாமல், வேடிக்கைச் சுவைக்காக அளவுமீறிப் புனைந்து கூறும் வருணனைகளும் இடம்பெற்றன. புராணங்கள் வளர்ந்த பிறகு, பல புராணங் கள் பெருகியபிறகு, புனைந்து கூறுவதில் புலவர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டார்கள்.

கற்பனை என்னும் பறவை மண்ணை விட்டுப் பறந்ததுமட்டும் அல்லாமல், விண்ணை விட்டும் பறந்துவிடுவதாயிற்று. வருணனைகள், வாழ்க்கை யோடு ஓரளவிற்காவது தொடர்புபட்டிருக்கவேண்டும் என்ற கொள்கை கைவிடப்பட்டது. அவ்வாறு வரம்பு கடந்த கற்பனை செய்வதும் கவிஞர்களுக்கு உரிய ஒரு மரபு என்று கருதும் நிலைமை வந்தது. குமரகுருபரர் அக்காலத்துப் புலவர்களுள் ஒரு தனிச்சிறப்பு உடையவராக இருந்த போதிலும், உண்மையான படைப்புத்திறன் வாய்ந்த பெருங்கவிஞராக விளங்கிய போதிலும், அந்தக் காலத்தின் வேகம் அவரையும் விடவில்லை. அளவு கடந்த கற்பனை வருணனைகள் அமைப்பதில் அவ்வுடைய புலமை நெஞ்சமும் ஈடுபட்டது.

அவருடைய வருணனைகளில் மண்ணுலகத்தின் மரங்கள் உயர்ந்து ஓங்கி விண்ணுலகை எட்டி, அங்கு உள்ள கற்பனை மரங்களோடு ஒன்றுபட்டு வளர்ந்து நிற்பதைக் காண்கிறோம். விளையாட்டுப் பெண்கள் சின்ன முச்சிலால் வாரிக் குவித்த மணிகள் பெரிய குவியல்கள் ஆகின்றன; வானத்தை எட்டி உயர்ந்த குவியல்களாய் வழியை அடைக்கின்றன; ஆற்றின் குறுக்கே நின்று அவை அடைப்பதால், ஆற்றின் நீரும் தடைப்பட்டுத் தேங்கி நிற்கின்றது; அந்தநீர்த் தேக்கத்தில் சூரியனும் சந்திரனும் தோணிகள் ஆகின்றன. மதுரையில் உள்ள சோலைகளில் உயரம் சொல்ல முடியுமா? அவைகளும் வானளாவி உயர்ந் திருக்கின் றன. வண்டுகள் அந்தச் சோலை மலர்களின் மகரந்தப் பொடிகளை உதிர்க்க, அந்தப் பொடி கள் ஆகாய கங்கையைத் தூர்ந்து விடுகின் றன. உழவர்கள்கள் குடித்து மயங்கும் மயக் கத்தில் எருமைகளுக்கும் வானத்தில் படரும் கருநிற மேகங்களுக்கும் வேறுபாடு அறியா மல் தடுமாறுகிறார்கள். அந்த மேகங்களை யும் தங்கள் எருமை களோடு சேர்த்துக் கட்டி வேலை வாங்குகிறார் களாம். வயல் களில் விளையும் கரும்புகளின் உயரம் எவ்வளவு? அவைகளும் வானளாவ வளர்கின்றன.

**பேராசிரியர் மு.வரதராசன்**

இந்திரனுடைய யானையாகிய ஐராவதம் அந்தக் கரும்புகளை விண்ணுலத்தில் இருந்த படியே தின்கின்றது. நெற் கதிர்களும் விண்ணுலகத்தினுள் எட்டி உயர்கின்றன. காமதேனு அங்கே அந்தக் கதிர்களைத் தின்று மகிழ்கின்றது. வாளை மீன் இங்கிருந்து துள்ளிப் பாய்ந்து சந்திரமண்டலத்தைத் தாக்கி அதன் அமிழ்த தாரைகள் பூமியில் பொழியுறுமாறு செய்துவிட்டுத் திரும்பி வருகிறது. மற்றொரு வாளைமீன் துள்ளிய துள்ளலில் விண்ணுலகத்தில் உள்ள காமதேனுவின் மடியில் முட்டுகிறது. அந்தக் காமதேனு, மடியில் முட்டியது தன் கன்று எனக் கருதிப் பாலைப் பொழிகிறது. இவ்வாறு அவர் எத்தனையோ கற்



பனைகளைப் படைத்துள் ளார். அவை சுவையாக உள்ளன என்றாலும், பொழுது போக்குக்கு உரிய வேடிக்கை யாக வே உள்ளன. பெரும்புலவராகிய அவரை அந்தக் காலத்துச் சொல்லலங்கார மயக்கமும் விடவில்லை. சிலேடை, மடக்கு முதலிய அலங்காரங்கள் அமைந்த செய்யுள்களையும் இயற்றியுள் ளார்.

(தொடரும்)

பலவந்தமாக

# சிறுவர்களை ஆயுதக் குழுவில் இணைத்தல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது

## ஐ.நா. பிரதிநிதி கமெரற் தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் ஆயுதக்குழுக்களில் இருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர்கள் மீண்டும் ஆயுதக் குழுக்களில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிறுவர் மற்றும் ஆயுத மோதல் விவகாரங்களுக்கு பொறுப்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட தூதுவரும் ஓய்வுபெற்ற ஜெனரலுமான கமெரற் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, அம்பாறை மாவட்டத்தில் ஆயுதக்குழுக்களில் இருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர்கள் மீண்டும் ஆயதக் குழுக்களில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆனால் யார் அவர்களை இணைத்துக் கொண்டுள்ளனர், எத்தனை சிறார்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரியாது. இதனால் சிறுவர்களை ஆயுதக்குழுக்கள் அம்பாறைப் பகுதியில் பலவந் தமாக இணைத்துக்கொள்ளலாம் என்ற அச்சங்கள் மக்களிடம் தோன்றியுள்ளது.

இதற்கமைவாக கிழக்கில் இயங்கிவரும் ரி. எம்.வி.பி. அமைப்பு ஐந்து சிறுவர்களை இணைத்துக் கொண்டுள்ளதாக எழுத்துள்ள பிரச்சினைகளை நாம் தீர்க்க முயன்றிருந்தோம். கருணாவும், பிள்ளையானும் சிறுவர்களை படையில் இணைத்துக் கொள்வதில்லை என உறுதியளித்துள்னர்.

அவர் மேலும் கூறுகையில், பல நூற்றுக் கணக்கான சிறுவர்களை காணவில்லை, ஐக்கிய நாடுகள் சபை, அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம், சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் போன்றவற்றிற்கு இடம்பெயர்ந்த முகாம் களிற்கு செல்லும் அனுமதிகள் வழங்கப்பட வேண்டும். முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர்களின் பட்டியல்கள் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களை கண்டுபிடிக்க முடியும். அவர்களை அவர்களின் குடும்பத்துடன் இணைக்கவேண்டும்.

விடுதலைப்புலிகளுடன் ஐந்து நாட்கள் இணைந்திருந்த பெண் போராளி ஒருவர் தனது சகோதரனை இழந்துள்ளார். அவரின் தாய் சுகவீனமுற்றுள்ளார். எனவே அவர் உடனடியாக வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். முன்னாள் சிறார் போராளிகள் மற்றும் இடம்பெயர்ந்துள்ள சிறுவர்கள் தொடர்பில் அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றபோதும் அது போதுமானதல்ல, மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

மேஜர் ஜெனரல் கமெரற் தனது விஜயம் தொடர்பான அறிக்கை ஒன்றை எதிர்வரும் ஜனவரி மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையின் செயற்குழுவில் சமர்ப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# கட்டுநாயக்காவில் வைத்து மருத்துவர் ஒருவர் கைது

## புலிகளுடன் பணியாற்றினாராம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவில் பணியாற்றியதாகக் கூறப்படும் மருத்துவர் ஒருவரை புலனாய்வுப் பிரிவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்துள்ளனர். இவர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர் மருத்துவப் பயிற்சிக்கான புலமைப்பரிசில் பெற்று இந்தியாவின் சென்னை நகருக்கு செல்ல முயன்ற போதே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)





சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயத்தின் பெண் குருளைச் சாரணர்களுக்கான சின்னஞ்சூட்டும் வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் உரையாற்றுவதையும், சின்னஞ்சூட்டப்பட்ட மாணவர்கள் மற்றும் வித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம், மாவட்ட சாரணர் ஆணையாளர் செ.சுப்பிரமணியம் மற்றும் சாரண ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# புதிய மாநில கோஷங்கள் சரியாகாது இதற்கு அனுமதிக்கவும் முடியாது

## பிரணாப் முகர்ஜி

ஆந்திராவைப் பிரித்து தனி தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்ததை அடுத்து மாநிலங்களிலும் இதே போல மாநில பிரிவினை கோஷங்கள் எழுந்துள்ளன. உத்தரப்பிரதேசத்தை மேலும் 3 மாநிலங்களாகப் பிரிக்க வேண்டும் முதலமைச்சர் மாயாவதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதே போல மேற்கு வங்காளம், குஜராத், மராட்டியம், மத்திய பிரதேசம் மாநிலங்களிலும் பிரிவினை கோஷங்கள் எழுந்து உள்ளன. இந்த மாநிலங்களில் ஏற்கனவே தனி மாநில போராட்டங்கள் நடந்தன. ஆனாலும் பெரிய அளவுக்கு அழுத்தம் கொடுக்கும் போராட்டங்கள் நடக்க இல்லை.

ஆனால் தெலுங்கானா மாநிலத்துக்கு அனுமதி கொடுத்து இருப்பதால் மற்ற பகுதிகளிலும் மாநில கோரிக்கைக்காக பெரிய அளவில் போராட்டங்கள் வெடிக்கும் நிலை உருவாகி உள்ளது.

இது குறித்து மத்திய மந்திரி பிரணாப் முகர்ஜி கூறியதாவது -தெலுங்கானா மாநிலம் கேட்கும் பிரச்சினை 60 ஆண்டு காலமாக உள்ளது. எனவே தான் மத்திய உள்துறை மந்திரி இது தொடர்பாக அறிவிப்புக்களை வெளியிட்டார்.

அதைக் காரணங் காட்டி மற்ற மாநிலங்களிலும் பிரிவினை கேட்பது சரியாக இருக்காது. இதற்கு மேலும் புதிய மாநிலங்களை உருவாக்கும் திட்டம் மத்திய அரசுக்கு இல்லை. இதற்கு அனுமதிக்கவும் முடியாது. இவ்வாறு பிரணாப் முகர்ஜி கூறினார். (ஓ-6-4)

# மீனவர்ளை அரசு கண்டுகொள்ளாவிட்டால் ஆயுதத்துடன் கடலுக்கு செல்லும் நிலை வரும்

## வைகோ ஆவேசம்

(இராமேஸ்வரம்)

தமிழக மீனவர்கள் ஆயுதம் ஏந்தி படகில் கடலுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

தங்கச்சிமடத்தில் நடந்த மீனவர்கள் வாழ்வுரிமை மாநாட்டில் மனித உரிமை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேசியதாவது,

தமிழகத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மீனவர்களை மத்திய அரசு கண்டுகொள்ளாமல் கொடுமையான சட்டத்தை இயற்றியுள்ளது. இதுபோன்ற கொடூரமான சட்டத்தை எந்த நாடும் இதுவரை போடவில்லை. இந்திய அரசு உதவி செய்ததால் புலிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டது. தமிழக மீனவர்கள் ஆயுதம் ஏந்தி படகில் கடலுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.



இலங்கை த்மிழர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் எதிரான காங்கிரஸ் அரசை மக்கள் தூக்கியெறியும் காலம் விரைவில் வரும் என்றார். (2-6)




திருவண்ணாமலை மாவட்டம் மேல் புத்தியத்தல் கிராமத்தில் விவசாயி பத்ரி நாராயணன் என்பவரது வயலில் செம்மை நெல் சாகுபடி முறையில் பயிர் செய்யப்பட்ட நெற்பயிர் ஆறே முக்கால் அடி உயரம் வளர்ந்துள்ளது.

# வங்கக்கடலில் வெற்றிகரமாக இந்திய ஏவுகணை சோதனை

(ஓரிசா)

இந்திய பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி




துறையினர் மற்றும் கப்பற்படை இணைந்து உருவாக்கிய தனுஷ் ஏவுகணை நேற்றுக் காலை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

விஞ்ஞானிகளின் கூட்டு முயற்சியால் தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணை ஒரிசா மாநிலம் பாலசோர் அருகே வங்கக் கடல் பகுதியில் காலை 11.30 மணியளவில் குறிப்பிட்ட இலக்கை நோக்கி சோதனை செய்யப்பட்டது. இந்தச்சோதனை வெற்றிகரமாக முடிந்தது.

அணு ஆயுதம் சுமந்து சென்று குறிப்பிட்ட இலக்கை தாக்கும் வல்லமை கொண்ட இது கடல் மற்றும் கடலோரப் பகுதியில் 350 கிலோமீற்றர் தூரம் வரையிலான இலக்குகளையும் தாக்கக்கூடிய திறன் பெற்றது.

கடந்த 2000 இல் ஏப்ரல் 11 ஆம் திகதி தனுஷ் ஏவுகணையின் முதல் கட்ட சோதனை நடத்தப்பட்டது. ஆனால் அப்போது தோல்வியை தழுவியது.சில தொழில்நுட்ப கோளாறுகளால், ஏவுகணையின் பல பகுதிகள் வெடித்து சிதறின. இந்தஏவுகணையின்சோதனைகடந்த2007 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. (2-6)

# என்.டி.ராமராவின் மனைவி உண்ணாவிரதம்



ஆந்திரா மாநிலத்தை பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைக்க முடிபு செய்த மத்திய அரசுக்கும் சோனியாகாந்திக்கும் மறைந்த என். டி. ராமராவின் மனைவியும் தெலுங்கு தேச தலைவியுமான இலட்சுமிபார்வதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தனி மாநில திட்டத்தை தடுத்து நிறுத்த இன்று முதல் என். டி.ராமராவ் சமாதி முன்னிலையில் உண்ணாவிரதம் இருக்கப் போர்வதாகவும் அறிவித்துள்ளார். (6-2)

# வாக்குகளை பெறுவதற்கு ஜெயலலிதா மீனவர்களை ஏமாற்றுகிறார் -கருணாநிதி குற்றச்சாட்டு-

(சென்னை)

திருச்செந்தூர் இடைத் தேர்தலில் வாக்குகளைப் பெற மீனவர்களை ஜெயலலிதா ஏமாற்றுகிறார் என்று முதல்வர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.



மீன்பிடி கட்டுப்பாடு மசோதாவை மத்திய அரசு கைவிட வேண்டும் என வலியுறுத்தி அ.தி.மு.க. சார்பில் டிசம்பர் 18ஆம் திகதி டில்லியில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்து முதல்வர் கருணாநிதி சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், மீனவர்களுக்கு விரோதமாக கடல் மீன் தொழில் சட்ட மசோதாவை மத்திய அரசு கொண்டு வரப் போவது தெரிந்த உடனேயே மத்திய அமைச்சர் சரத் பவாருக்கு கடந்த மாதம் 17ஆம் திகதி விரிவான கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் சட்ட மசோதா குறித்து தமிழக மீனவர்களின் சந்தேகங்களையும் அச்சத்தையும் மத்திய அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்தேன். இந்தப் பிரச்சினைகள் குறித்து மீன்பிடி தொழிலில் தொடர்புடையவர்களுடன் விரிவாகக் கலந்து பேசிய பிறகு அனைத்தையும் உள்ளடக்கிய முற்போக்கான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று திட்டவட்டமாகத் தெரிவித்து இருந்தேன்.

கடிதத்தை எழுதியதுடன் நிற்கவில்லை. மத்திய அமைச்சர் தயாநிதி மாறனைத் தொடர்பு கொண்டு உடனடியாக மத்திய அமைச்சர் சரத் பவாரைச் சந்தித்து மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக பேசுமாறு பணித்தேன். மத்திய அமைச்சர் தயாநிதி மாறனும் கடந்த 10ஆம் திகதி மத்திய அமைச்சர் சரத் பவாரைச் சந்தித்து மீனவர்களின் நிலைமைகளை விளக்கியிருக்கிறார்.



இதைத் தொடர்ந்து மசோதாவை நடப்பு நாடாளுமன்றக் கூட்டத்தில் தாக்கல் செய்யமாட்டோம் .

இந்த மசோதா குறித்து அனைத்து முதல்வர்கள் மற்றும் மீனவப் பிரதிநிதிகளின் கருத்து கேட்கப்படும் என்று உறுதி அளித்திருக்கிறார். இந்தச் செய்திகளைத் தெரிந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா இது மீனவர்களை ஏமாற்றும் செயல் எனவும் இதற்காக டில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகவும் அறிவிக்கிறார். உண்மையில் மீனவர்களை ஏமாற்றுகின்ற செயல் எது? ஏமாற்றுகின்றவர் யார் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளலாம்.

நவம்பர் மாதம் மசோதா வரப் போகிறது என்று தெரிந்ததும் நவம்பர் 19ஆம் திகதியன்றே மத்திய அமைச்சருக்கு கடிதம் எழுதி விட்டேன். ஆனால் ஜெயலலிதா ஒரு மாத காலம் சும்மாயிருந்து விட்டு இப்போது திருச்செந்தூர் இடைத் தேர்தல் என்றதும் அங்கே யுள்ள மீனவர்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக டில்லியில் ஆர்ப்பாட்டம் என்று அறிக்கை விடுகிறார். இந்த உண்மைகளை மீனவர்களுக்கு தெரியும் என்று தனது அறிக்கையில் கருணாநிதி தெரிவித்துள்ளார். (2-6)

# தமிழகத்தை இரண்டாக பிரிப்பதே நிர்வாக வசதிகளுக்கு நல்லது

## பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ்


(சென்னை)

தமிழகத்தை இரண்டாகப் பிரித்து இன்னொரு மாநிலம் உருவாக்குவதால் நன்மை தான் ஏற்படும் என்று பா.ம.க. நிறுவனர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சென்னையில் நேற்று முன்தினம் கூறியதாவது,

ஆந்திரத்தை இரண்டாகப் பிரித்து தெலுங்கான மாநிலம் உருவாக்குவதை பா.ம.க. ஆதரிக்கிறது. எங்கள் கட்சி ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் இருந்த போது தனி தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவது பற்றி குறைந்த பட்ச செயல் திட்டத்திலேயே வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

அப்போது அதைப் பயன்படுத்திக் கொள்ள தெலுங்கான ஆதரவாளர்கள் தவறி விட்டனர். தெலுங்கானா மட்டுமின்றி மகராஷ் டிரத்தில் விதர்பா உட்பட இப்போது எழுந்துள்ள தனி மாநில கோரிக்கைகள் அனைத்தும் மத்திய அரசால் பரிசீலிக்கப்பட வேண்டும். சிறிய மாநிலங்களே நிர்வாக வசதிக்கு நல்லது. அண்மையில் உருவாக்கப்பட்ட உத்தராஞ்சல் உள்ளிட்ட சிறிய மாநிலங்கள் மிக வேகமாக வளர்ச்சி பெற்று வரு கின்றன.



எனவே தனி மாநில கோரிக்கைகள் பற்றி முடிவெடுக்க மத்திய அரசு உடனடியாக அனைத்துக்கட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டும். இப்பிரச்சினையை அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்காமல் மத்திய அரசு மிக உறுதியான நடவடிக்கை எடுத்து புதிய மாநிலங்களை உரு வாக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் கூட எல்லாப் பகுதிகளிலும் சீரான பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால் தென்மாவட்டங்களுக்கென தனி மாநிலம் உருவாக்க வேண்டும் என நான் 10 ஆண்டுகளுக்கு முன்பே கூறினேன் அவ்வாறு பிரிப்பதால் நன்மையே ஏற்படும்.

முன்பு நான் இந்த கோரிக்கையை வலியுறுத்தியபோது பலரும் எதிர்த்தனர். அப்போது எதிர்த்தவர்கள் பலர் இனி எதிர்க்க மாட்டார்கள் இப்போது சூழ்நிலை மாறியுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (2-6)

# நாம் வேறொருவரிடம் ஒப்படைத்திருந்தாலும் பொன்சேகாவின் கடமை நிறைவேற்றப்பட்டிருக்கும்

## கோத்தபாய ராஜபக்ஷ



(கொழும்பு)

சரத் பொன்சேகாவை ஒரு சிறந்த இராணுவத் தளபதியாகவே நாம் கருதினோம் சரத் பொன்சேகா மேற்கொண்ட கடமைகளை வேறொருவருக்குக் கையளித்திருந்தால் அவரும் அக்கடமைகளை சிறந்த முறையில் செய்திருப்பார் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சிங்கள வார இதழொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அச் செவ்வியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சரத் பொன்சேகாவினால் மேற்கொள்ளப் பட்ட கடமைகளை எவரும் எளிதில் செய்து முடிக்கலாம்.

சரத் பொன்சேகாவுக்கு நாமே வழிகாட்டிகளாக இருந்தோம். அவருக்கு தேவையான பக்க பலத்தையும் ஒத்துழைப்பையும் அத்துடன் ஆயுதங்களையும் நாமே வழங்கினோம் இது மாத்திரமல்ல நாம் அனைத்து சர்வதேச நாடுகளின் அழுத்தங்களையும் நிறுத்தினோம்.

மேலும் அவருக்குத் தேவையான ஆட்பலத்தையும் நாமே வழங்கினோம். சரத் பொன்சேகா ஒரு சாதாரண இராணுவத் தலைவர் மாத்திரம் தான் எனினும் ஒரு இராணுவத் தளபதியாக இருந்து . அவர் தனது கடமைகளைச் செய்து வந்தார். அவர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ அல்லது ஜெனரல் விஜய விமலரத்ன ஆகியோர் போன்று அவ்வளவு பிரசித்தி பெற்றவரல்ல இவர்கள் ஒரு போதும் இராணுவத்துக்கு கட்டளையிடவில்லை என்றாலும் மக்கள் இவர்களை அறிந்து தெரிந்து வைத்திருந்தனர். இவர்கள் பாரிய இராணுவ நட வடிக்கைகளை மேற்கொண்டனர்.

2005 டிசம்பருக்கு முன் சரத் பொன்சேகாவை யாரும் தெரிந்து வைத்திருக்கவில்லை அவருடைய இராணுவ வாழ்க்கையில் தோல்வியுற்ற சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து படைகளை நீக்கிக் கொள்வதற்கான அனுமதியை வழங்கியது சரத் பொன்சேகா தான்.

அவர் படையில் இருக்கும் போது அதிகமாகவே கட்டளைப் பணிகளில் ஈடுபட்டார் என்றாலும் கடந்த காலங்களில் நாம் பெற்ற வெற்றிகளில் பத்தில் ஒரு பங்கையாவது அவர் பெற்றிருந்தாரா? இக்காரியங்களைச் செய்வதற்கான தகுதி பெற்ற ஒரே நபர் இவர் என்றால் இவருக்கு இவரது தகைமைகளை 2005 டிசம்பருக்கு முன்பு இவருடைய இராணுவ வாழ்க்கயின் போது நிருபித்துக் காட்டியிருக்க முடியுமல்லவா? என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# இந்தியக் கடற்பரப்பில் இலங்கை மீனவர் கைது

இந்தியக் கடல் எல்லையை மீறிய மேலும் 40 இலங்கை மீனவர்கள் அந்த நாட்டு கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களது 8 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மீன் பிடித் திணைக்களம் தெரிவிக்கின்றது. தமிழ் நாட்டு கடல் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ள இந்த மீனவர்கள் தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான தகவலை சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினூடாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மீன் பிடித்திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-6)

# மக்களின் பல்லின பல்கலாசார தன்மைகளை மதித்து நடத்தல் அவசியமானது

## கலாநிதி தயான் ஜயதிலக்க

(கொழும்பு)

யுத்தம் முடிவுற்றவுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தியிருந்தால் அப்பிரச்சினை அத்துடன் முடிந்திருக்கும்.அப்படிச் செய்திருந்தால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மீண்டும் தலைதூக்க வாய்ப்பு கிட்டியிருக்காது.

வவுனியா யாழ். உள்ளூராட்சி சபைகளுக்காக நடந்த தேர்தல்களில் அக்கட்சி கனிசமான ஆசனங்களை பெற்றிருக்காது. அத்தகைய நிலையில் ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் பேசி இணக்கப்பாடுகளை கண்டிருக்கலாம்.

ஆனால் அதைச் செய்யத் தவறியதால் த.தே.கூ.மீண்டும் தலைதூக்கியுள்ளது. இனி தமிழ்த்தேசிய கூட்டமைப்பை திருப்திப்படுத்த வேண்டிய தேவை ஏற்படலாம்.

அப்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை விட கூடுதலாக எதையும் கொடுத்துத்தான் திருப்திப்படுத்தவேண்டியிருக்கும் என ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர பிரதிநிதி கலாநிதி தயான் ஜெயதிலக்க தெரிவித்தார்.

கடந்த வியாழனன்று சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கொழும்பில் உள்ள ஐ.நா. தகவல் நிலையமும் இலங்கை மன்றக் கல்லூரியும் ஏற்பாடு செய்த கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தயான் ஜெயதிலக மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் ,

நாட்டின் பல்லினத்தன்மையை பல்கலாசாரங்களை ஏற்றுக்கொள்வது அவசியமானது. அமெரிக்கா, இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் மக்களின் பல்லின, பல்கலாசார தன்மைகளை ம்திக்கும் நாடுகளாக விளங்குகின்றன. இந்தியாவில் 80 சதவீதமானோர் இந்துக்கள். ஆனால் அது மதசார்பற்ற நாடாக விளங்குகிறது. பல்லினத் தன்மைகளை உள்வாங்கும் ஒரு நாடாக இந்தியா உள்ளது.

அந்நாட்டிலும் 80 களில் சீக்கியர்கள் தனிநாடு கோரி போராட்டம் நடத்தினார்கள்.எனினும் அங்கு சிறுபான்மையினரான முஸ்லிம்கள் ஜனாதிபதியாக இருந்துள்ளனர். சீக்கியர்கள் பிரதமராக இருந்துள்ளனர். இத்தாலியில் பிறந்த ஒருவர் நாட்டின் முக்கிய கட்சி ஒன்றுக்கு தலைமை தாங்குகிறார்.

மும்பையில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னரும் இந்தியாவில் நடைபெற்ற தேர்தல்களில் இந்துத்துவவாதப் போக்கைக் கொண்ட பாரதிய ஜனதாக் கட்சியை மக்கள் ஆதரிக்கவில்லை. மாறாக பல்கலாசார பல் மத பண்புகளை மதிக்கும் காங்கிரஸ் கட்சியையே மக்கள் ஆதரித்தனர்.

இலங்கையில் யுத்தம் முடிந்து விட்டது. ஆனால் குறிப்பிட்ட சில இன மதங்களை சாராதவர்கள் மீது இலக்கு வைக்கப்பட்டு வன்முறைகள் இடம்பெறுகின்றன. கிறிஸ்தவ ஆலயங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இது புதிய விடயமல்ல.

19ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் இலங்கையில் இத்தகைய வன்முறைகள் இடம் பெற்றுள்ளன. பௌத்தர்கள், கிறிஸ்தவர்களுக்குமிடையில் பின்னர் சிங்களவர்கள் முஸ்லிம்களுக்கும் இடையிலும் மோதல்கள் நடந்தன. 1950களில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் கலவரம் இடம் பெற்றது. அது பெரும் யுத்தமாக மாறியது.



மற்ற நாடுகளிலும் இந்நிலைமை உள்ளது. சிலரிடம் தானே உயர்ந்தவர் தனது இனமே தனது மதமே உயர்ந்தது என்ற எண்ணம் உள்ளமையே இத்தகைய மோதல்களுக்கு காரணம். பல்லினத் தன்மையை பல்கலாசாரத்தை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வளர வேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் காரணமாக மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை. இப் போது யுத்தம் முடிந்துவிட்டது எனவே மனித உரிமைகளை, விதிகளை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்.

பல்லினத்துவத்தை மதிக்கவும் பார பட்சத்திற்கு எதிராக போராடவும் வேண்டும். இல்லாவிட்டால் அவநம்பிக்கைகள் ஏற்பட்டு புதிய வடிவில் வன்முறைகள் நிகழக் கூடும். இதைச் செய்யாவிட்டால் 30 வருட கால யுத்தத்தின் பின்னராவது நாம் எதையும் கற்றுக் கொள்ள வில்லை என்றே அர்த்தமாகும் என்றார். (2-6)

# குடும்ப விபரங்களை திரட்டி வரும் பொலிசார்

## -மன்னாரில் மக்கள் அச்சம்-

(கொழும்பு)

மன்னார் நகரில் பொலிஸார் மீண்டும் குடும்ப விபரங்களை திரட்டும் பணியினை அவசர அவசரமாக முன்னெடுத்து வருகின்றமை மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருப்பதாக தெரிகின்றது.

சமீப நாட்களாக மன்னார் மாவட்டம் தழுவிய ரீதியில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வதியும் பொதுமக்களின் விபரங்களை திரட்டும் நடவடிக்கைகளில் பொலிஸ் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றது.

வீடுகள், அலுவலகங்கள், கடைகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் ஆகியவற்றின் விபரங்களும் அவற்றில் உள்ளவர்களின் விபரங்கள் உள்ளடங்கியதான பெயர்ப்பட்டியல்களை பொலிஸார் திரட்டி வருகின்றனர்.

கடந்த யுத்த காலங்களின் போது மேற்கொள்ளப்பட்டதைப் போன்ற ஒரு அதிரடி நடவடிக்கையாகவே தற்போதும் இது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. முன்னறிவித்தல் களோ போதிய விளக்கங்களோ பொது மக்களுக்கு வழங்கப்படாத நிலையில் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்ற விபரத்திரட்டல்களால் மக்கள் குழப்பநிலைக்கு உள்ளாகியிருப்பதாக தெரிய வருகின்றது. (2-6)

விவாத அரங்கு—02
யாழ்.குடாநாட்டின் வீதிகளை விஸ்தரிப்பது
உடனடி அவசியம் | அவசியமில்லை
தீர்ப்பு : 16.12.2009
விவாத அரங்கு —03
மாணவர்களின் கல்வி முன்னேற யாழ். குடாநட்டிலுள்ள சிறிய பாடசாலைகளை பெரிய பாடசாலைகளுடன்
இணைக்க வேண்டும் | இணைக்கக்கூடாது
விவாதம் திங்கள் 21.12.2009 ஆரம்பம்

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 5 விதி எண் : 5

### உலமைப்பு

பிறந்த எண், விதி எண் இரண்டும் 5 ஆகக்கொண்டவர்கள் புதனின் முழு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் நடுத்தர உயரமுள்ளவர்களாகவும் பிறரைக் கவரும் தோற்றமுள்ளவர்களாகவும் இருப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் துணிச்சல் மிக்கவர்கள். எதையும் பெரிது படுத்தமாட்டார்கள். தம் வாழ்க்கையில் எத்தனை பெரிய கஷ்டம் வந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். தன்னால் முடியாதது ஒன்றுமில்லை என்ற மனப்பான்மை கொண்டவர்கள்.

இவர்கள் அவசரக்காரர்களாக இருப்பர். எதையும் சீக்கிரம் செய்து முடித்துவிட வேண்டுமென்று நினைத்து செயல்படுவர். தம்மைப் போல பிறரும் இருக்கவேண்டும். சீக்கிரம் செய்யவேண்டும் என்று வற்புறுத்துவர். இல்லையெனில் கோபத்திற்கு ஆளாவர்.

இவர்கள் பிறரைப் போன்றில்லாது வித்தியாசமாகக் காணப்படுவர். இவர்கள் தாம் எதையாவது புதுமையாக செய்ய வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர்கள். அது மட்டுமின்றி பிறர் கூறுவதை விரைவில் கிரகித்துக்கொள்ளும் திறன் இவர்களிடம் இயல்பாகவே இருக்கும்.

இவர்கள் கள்ளம் கபடமறியாதவர்கள். பிறரிடம் மனம் விட்டு குழந்தைபோல குழைந்து பழகுவர். தம் மனத்திலுள்ளதை அப்படியே கூறிவிடுவர். அதனால் பலருடைய நல்லாதரவு இவர்களுக்கு இருக்கும்.

தயவு தாட்சண்யம் கொண்டவர்கள். பிறர் கஷ்டப்படுவதைக் கண்டு பொறுக்காமல் உதவக் கூடியவர்கள். பலரும் இவரிடம் விரும்பிப் பழகுவர். கடவுள் பக்தியுள்ளவர்களாகவும் இருப்பர்.

இவர்கள் தமக்கு எதிராக யாராவது செயல்பட்டால் அவர்களையும் தமக்குப் பிடிக்காதவர்களையும் வஞ்சகமாக இருக்குமிடம் தெரியாமல் செய்துவிடுவர்.

இந்த வகையில் இவர்கள் ஆபத்துப் பேர்வழிகளாக இருப்பர். பழிக்குப் பழி வாங்கும் சுபாவம் கொண்ட வர்கள்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு நல்ல வாழ்க்கைத் துணை அமையும். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் கவலைகள் எவ்வளவு இருந்தாலும் அதைப் பொருட்படுத்தமாட்டார்கள். அதைத் தம் அறிவாற்றலால் சமாளித்து விட்டு சந்தோஷமாக இருக்க முயற்சி செய்வர்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் மருத்துவம் , கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் அதிக நாட்டமுள்ளவர்களாகவும், அத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருக்கக் கூடும். இவர்கள் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணி புரிபவர்களாக இருப்பர். கலைத் தொடர்பிலும் எழுத்துத் துறையிலும் பாலியல் துறையிலும் தேர்ச்சி பெற்றிருக்கக்கூடும்.

வண்டி, வாகனம் மற்றும் ஏந்திரத் தொழில்களை நடத்தவோ அத்துறையில் பணிபுரிதலோ கூடும்.

இவர்கள் எத்துறையில் ஈடுபட்டிருந்தாலும் தமக்கென ஒரு பாதையமைத்து புதிய யுக்திகளைக் கையாண்டு நிறைய பொருள் சேர்ப்பவராக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு இருதய சம்பந்த நோய்கள், இரத்த அழுத்தம், மாரடைப்பு போன்றனவும் மூட்டுவலி, முதுகுவலி போன்ற நோய்களும் ஏற்படும்'. இவர்களுக்கு அடிக்கடி பல் வலி ஏற்படவும் கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் புதன் ஆதிக்கம் பெற்ற 5 உடன் செவ்வாய் ஆதிக்கம்பெற்ற 9அது தொடர்புடையவற்றில் யோகமான எண்களுக்கு தம் பெயரை அமைத்துக்கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கூட 5, 9 தொடர்புடையதே யோகமானது.

இவர்களுக்கு 5,9 எண்ணும் அது தொடர்புடைய திகதிகளும் நன்மையளிக்க வல்லவை. மற்றவற்றில் இவர்களுக்கு மிகவும் கெடுதல் செய்யக்கூடியது என்று குறிப்பிட்டுக் கூற இயலாது.

## உடல் எண் : 5 விதி எண் : 6

### உடலமைப்பு

பிறந்த எண் 5 ,விதி எண் 6 ஆகக் கொண்டவர்கள் புதன் , சுக்கிரன் ஆகிய இரு சுப கிரகங்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் சற்று உயரமானவர்களாகவும் பிறரைக் கவரும் தோற்றுமுள்ளவர்களாகவும் இருப்பர்.

### மனத குணவியல்பு

இவர்களின் தோற்றத்தைவிட நடையுடை பாவனை பிறரைப் பெருமளவு கவரும் படி இருக்கும். அந்த அளவுக்கு பிறர் கவர தாம் இருக்க வேண்டுமென்ற அக்கறையுடன் இருப்பர். இவர்கள் கலா ரசிகர்களாகவும் அழகிய பொருட்களையும் இயற்கைக் காட்சிகளையும் ரசிக்க வல்லவர்களாகவும் இருப்பர். எதையும் எளிதில் கிரகிக்கும் திறன் பெற்றவர்கள்.

இவர்கள் மனத்தில் ஒன்றும் வெளியில் ஒன்றுமாக எண்ணவோ செய்யவோ மாட்டார்கள். எதையும் வெளிப்படையாகக் கூறிவிடுவர். அதனால் இவர்கள் மீது பிறருக்கு நம்பிக்கையும் மரியாதையும் இருக்கும் .

அது மட்டுமின்றி , இவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் தன்னலத்தோடு பிறர் நலனும் கலந்திருக்கும் . அதனால் இவர் இலாபம் பெறும்போதும் பிறரும் எந்த வகையிலாவது ஒரு நன்மையினை அடைவர்.

இவர்கள் எப்போதும் சுறுசுறுப்புடன் செயல்பட்டுக்கொண்டே இருப்பர். சிறிதும் சோர்ந்திருக்கமாட்டார்கள் .ஆனால் சோம்பல் கொண்டு விட்டால் போதும் நேரம் காலமின்றித் தூங்கிக் கொண்டே இருப்பர். இவர்கள் அதிகமாகக் கஷ்டப்பட்டு சம்பாதிக்க மாட்டார்கள். குறைந்த உழைப்பு ,அதிக இலாபம் என்ற கணக்கில் செய்வர். நண்பர் சூழ்ந்து காணப்படுவர். யாருக்கும் தீங்கு செய்யமாட்டார்கள் .ஆனால் தனக்குப் பிடிக்காதவரை பழிவாங்கவும் அஞ்சமாட்டார்கள். பகைவரையும் இருக்குமிடம் தெரியாமல் செய்து விடுவர். அதனால் இவர்களை யாரும் வெளிப்படையாகப் பகைக்கவோ எதிர்க்கவோ மாட்டார்கள் .

இவர்களிடம் கடவுள் பக்தி மிகுந்திருக்கும் அதே நேரத்தில் அதிக காம வேட்கை கொண்டவர்களாகவும் இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கைத்துணை நல்ல விதமாக அமையும். ஆனால் இவர்கள் தம் மனைவியின்பால் பூரண திருப்தி பெறாமல் பெண்கள் பலருடன் தொடர்பு கொண்டு திரிய நேரும். அதனால் குடும்பத்தில் பூரண அமைதி இருப்பது கடினம். இவர்களுக்கு இணையாக மனைவி அமைந்தால் சந்தோஷம் நிலவ வாய்ப்புண்டு.

### தொழிலும் , வருமானமும்

இவர்கள் எப்போதும் பணம் சம்பாதிப்பதிலேயே முழு கவனம் செலுத்துபவர்களாக இருப்பர். கலாரசிகர்களாகவும் , இசை, சங்கீதம், நாட்டியத்துறையில் ஈடுபாடு மிகக் கொண்டவர்களாகவும் இருப்பர்.

இவை தவிர மருத்துவம் , சமயம் மற்றும் சட்டத்துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருக்கக் கூடும். ஆடம்பரப்பொருள், வண்டி, வாகனங்கள் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருப்பர். சுலபமாக பணம் சம்பாதிக்க சிலர் லாட்டரி,ரேஸ், சூதாட்டம் போன்ற துறைகளில் ஈடுபடவும் கூடும். இவர்கள் எத்துறையிலும் அதிகமாக பொருள் சேர்க்கை பெறுபவர்களாக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உடலுறுவு மிகுதியினால் அது தொடர்பான நோய்களும் , சர்க்கரை மற்றும் சிறுநீரக சம்பந்த நோய்களும் ஏற்படும். இவை தவிர மூட்டு வீக்கம், முதுகுவலி ஏற்படக் கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் 5, 6 ஆகிய புதன் ,சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற விஸ்தார எண்களில் யோகமான பலனளிக்கும் எண் ஒன்றில் பெயர் அமைத்துக்கொள்ளலாம். தம் நிறுவனங்களுக்குக்கூட இந்த எண்களில் பெயர் அமைக்க யோகமாகும். இவர்களுக்கு 5,6 தொடர்புடைய எண்களும் திகதிகளும் யோகமானவை.

குரு ஆதிக்கம் பெற்ற 3 அது தொடர்புடைய எண்களும் திகதிகளும் யோகமற்றவை. (தொடரும்)

---

*இராணுவ ரீதியில்*

## இலங்கைக்கான உதவிகளை வழங்குவதில் அமெரிக்காவின் புதிய கெடுபிடி

இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்குவது தொடர்பில் அமெரிக்க அரசாங்கம் புதிய கெடுபிடிகளை அமுல்படுத்தத் தீர்மானித்துள்ளது.

இதன்படி இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகளை வழங்குவது தொடர்பில் அமெரிக்கா சில கட்டுப்பாடுகளை விதிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைவாக இராணுவ உதவிகளை வழங்குவதற்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையிலான சட்டமொன்று அமெரிக்க பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் சம்பவங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி அமெரிக்க காங்கிரஸ் அனுமதி வழங்கும் வரையில் இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகளை வழங்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை விவகாரம் தொடர்பில் அமெரிக்க செனட்சபை அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இடம்பெயர் மக்களின் நிலைமைகள் குறித்தும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவடைந்தமை வரவேற்கத்தக்கதெனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

தமிழ் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களது உரிமைகளை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் காத்திரமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு இந்த அறிக்கையின் அடிப்படையிலேயே எதிர்வரும் 2010ஆம் ஆண்டுக்கான அமெரிக்க வரவு செலவுத் திட்டத்தில் நாடுகளுக்கு உதவி வழங்குவது தொடர்பிலான நிதி ஒதுக்கீடுகள் தீர்மானிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

## கிளிநொச்சி மாவட்டத்தின் மீளக்குடியமர்வு நடவடிக்கை

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக மீள் குடியமர்வுக்கு விண்ணப்பித்துப் பதிவு செய்து கொண்டவர்களில் தற்போது மீள் குடியேற்றம் நடைபெற்றுவரும் கரைச்சி, பூநகரி போன்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த, நலன்புரி நிலையங்களுக்கு வெளியே நண்பர்கள் உறவினர்களுடன் வாழும் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த உருத்திரபுரம் கிழக்கு, ஜெயந்திநகர், பெரிய பரந்தன், உதயநகர் மேற்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்டோர் நாளை தம்மை உறுதிப்படுத்துவதுடன் எதிர்வரும் 17 ஆம் திகதி மீள்குடியேற்றத்துக்குத் தயாராக வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முழங்காவில், இரணைதீவு, நாச்சிக்குடா, ஜெயபுரம் வடக்கு, ஜெயபுரம் தெற்கு, கிராஞ்சி, பல்லவராயன்கட்டு, பொன்னாவெளி, நல்லூர் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி தமது பயணத்தை உறுதிப்படுத்தி 19 ஆம் திகதிக்கு மீள் குடியேறத் தயாராக வேண்டுமெனவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் செயலகம் தெரிவித்துள்ளது.

மேல் குறிப்பிட்ட கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட மக்கள் முதற் கட்டமாக மீளக் குடியமர்விற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் அவர்கள் மேற்படி திகதிகளில் தமது பயணத்தினை குருமன்காட்டில் அமைந்துள்ள மாவட்டச் செயலகத்தில் உறுதி செய்து கொள்வதுடன், பயணிக்கும் நாளன்று காலை 8.00 மணியளவில் வவுனியா நகர சபை மைதானத்திற்குச் சமூகமளிக்குமாறும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (2-6)

*இந்த ஆண்டில் மட்டும்*

## 221 வெளிநாட்டுப்பிரஜைகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்

இந்த ஆண்டின் நவம்பர் மாதம் வரையில் சுமார் 221 வெளிநாட்டுப் பிரஜைகள் நாடு கடத்தப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்டதிட்டங்களை மீறியவர்களே இவ்வாறு பெரும்பாலும் நாடு கடத்தப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் உயரதிகாரி தேவேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

இதில் அதிக எண்ணிக்கையிலானோர் இந்தியர்கள் எனவும் பாகிஸ்தான் மற்றும் சீனர்களும் அதிகளவில் நாடு கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாடு கடத்தப்படும் வெளிநாட்டு பிரஜைகள் கறுப்புப்பட்டியல் இடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குடிவரவு, குடியகல்வு சட்டங்களை மீறிய மேலும் 50 பேர் இன்னமும் மிரிஹான காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-2)

குளிக்கப் போன நீ, குளி; அல்லது கிணற் றடியை விட்டு செல்.

- ஓர் ஆங்கிலப் பழமொழி

வலம்புரி

## இந்தியாவின் பற்றறுக்க முடியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிபை எடுக்க முடியாத இக்கட்டான சூழ் நிலைக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிக்கி யுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி ஜனாதிபதித் தேர் தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிபை எடுக்கும் அளவுக்கு அவர்களிடம் ஒற்றுமை போதாது உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தாவும் அவருடன் இணைந்தவர்களும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் அவருடன் இணைந்தவர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற கருத்தியலை கொண்டுள்ளனர்.

எஞ்சியவர்களில் ஒரு பகுதியினர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கலாம் என்ற வாதத்தை முன்வைக்கின்றனர்.

இவ்வாறு கூட்டமைப்புக்குள் வாதப்பிரதிவா தங்கள் எழுந்துள்ள நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல கூறுகளாக பிரிவதற்கான வாய்ப்பு கள் தாராளமாக உண்டு.

இதே பிரச்சினை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கு மாக இருந்தால் திராவிட முன்னேற்றக்கழகம் இறுதிமுடிவெடுக்கும் உரிமையை கலைஞர் கருணா நிதியிடம் விட்டுவிட்டது என்ற செய்தியும்,

அ.தி.மு.க. ஆயின் இறுதி முடிபை கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவே எடுப்பார் என்று அறிவித்தலும் வெளிவந்திருக் கும்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதி முடிபெடுக்கும் அதிகாரத்தை இரா. சம்பந்த னிடம் ஒரு போதும் வழங்கப் போவதில்லை.

எனவே இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து போகும் ஆபத்தை சந்தித் துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு இது வரை யாரை ஆதரிப்பதென்ற முடிபை எடுப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இத் துணைகால அவகாசம் தேவை எனில், அந்த அமைப்பு எங்ங னம் தமிழ் மக்களை வழிப்படுத்தப் போகின்றதென் னும் கேள்வி நியாயமானதாகவே இருக்கும்.

எதுவாயினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுப்பதற்கு இந்திய தேசத் தின் இறுக்கமான பற்று தடையாக இருக்கின்ற தென்னும் உண்மை மறப்பதற்குரியதல்ல.

இந்தியாவின் பற்றறுத்து முடிபெடுக்கும் பக்குவ நிலையில் சம்பந்தர் இல்லை என்பதால், ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிபை எதிர்வரும் ஜனவரி 27ஆம் திகதியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிக்கும் போல் தெரிகிறது.

# பொன்சேகாவுடன் நேரடி விவாதத்திற்கு ஜனாதிபதியை அழைக்கிறார் சோமவன்ச

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவுடன் நேரடி தொலைக்காட்சி விவாதம் ஒன்றுக்கு தயாரா என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வியெழுப்பியுள்ளார் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க.

ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் கட்சிகள் இணைந்து நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டி லேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

அவ் ஊடகவியலாளர் மாநாட்டில் தொடர்ந்து கருத்து ரைத்த சோமவன்ச அமரசிங்க, நடைபெற்று முடிந்த போர் தொடக்கம் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பகிரங்க தொலைக்காட்சி விவாதத் திற்கு எமது ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா தயாரா கவுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவ்வாறான ஒரு நேரடி தொலைக்காட்சி விவாதத்தில் பங்கு கொள்வதற்கு முடியுமா எனச் சவால் விடுத்துள்ளார்.

இவ்வூடகவியலாளர் மாநாட்டில் பிரசன்னமாயிருந்த ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா, சோமவன்ச அமர சிங்க குறிப்பிட்டதைப் போன்று ஜனாதிபதியுடன் ஒரு பகிரங்க நேரடித் தொலைக்காட்சி விவாத்திற்குத் தான் தயார் என்றும் அங்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இந்தியப் படையினரை சிறைபிடித்த இலங்கைப் படகுக்கு என்ன நடந்தது?

(சென்னை)

இந்தியக் கடல் எல்லைக்குள் காணாமல் போன இலங்கை வின்ட் மறைன் 8 என்ற படகையும் மீனவர்களையும் தேடி கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் இந்தியாவும் இலங்கையும் ஈடுபட்டுள்ளதாக பிரதி கடற்தொழில் அமைச்சர் நியோமால் பெரேரா கூறியுள்ளார்.

எனினும் இந்தப்படகு வங்காள விரிகுடாவில் தீப்பற்றி எரிவதை கடந்த 11ஆம் திகதி அவதானித்ததாக கடற்படைப் பேச்சாளர் பி.வி.சத்தீஸ் கூறியதாகவும் செய்திகள் தெரிவிக் கின்றன.

படகின் மேல் பகுதி எரிந்ததால் அதில் இருந்தவர்கள் தப்புவதற்கு வாய்ப்பில்லை என்றும் அவர் தெரிவித்தார் என பி.ரி.ஐ. நேற்று முன்தினம் இரவு தகவல் வெளியிட்டது.

இந்தக் கப்பலை தேடிக்கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் இந்திய-இலங்கைக் கடற்படையினர் கூட்டாக ஈடுபட்டுள்ளனர் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு முன்னர் அறிவித் திருந்தது.

கடந்த புதன்கிழமை இரவு பிரஸ்தாப கப்பலில் சென்ற இலங்கை மீனவர்கள் கரையோரக் காவல் படையினர் இரு வரை பணயக் கைதிகளாக பிடித்திருந்தனர்.

சென்னைக்கு கிழக்கே 200 கடல் மைல் பரப்பில் வைத்து இந்திய கடற்படையால் மிகவும் அவதானமாக முன்னெடுக் கப்பட்ட நடவடிக்கை காரணமாக இருவரும் பத்திரமாகமீட்கப் பட்டனர்.

அதன் பின்னர் இலங்கை கரையை நோக்கி வந்த அந்தப் படகு கடல் பிரதேசத்தில் வீசிய கடும் காற்று, கடல் கொந்தளிப்பு ஆகியவற்றில் சிக்கி காணாமல் போயுள்ளதாக இலங்கை வெளி விவகார அமைச்சு தெரிவித்திருந்தது. இந்தப்படகைத் தேடி இந்திய-இலங்கைக் கடற்படையினர் தேடுதல் நடத்தி வருவதாக மேலும் தெரிவித்திருந்தது (ச-5)

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று யாழ். போதனா வைத்திய சாலைக்கு விஜயம் செய்து வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்டார்.

நேற்று காலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த அமைச்சரை யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர் தேவநேசன், நிர்வாக அதிகாரி பத்மநாதன், வைத்திய அதிகாரிகள் மற்றும் தாதிய உத்தி யோகத்தர்கள் ஆகியோர் வரவேற்றனர். இதனைத் தொடர் ந்து நோயாளர் விடுதிகள் உட்பட அனைத்து மருத்துவப் பிரிவுகளையும் பார்வையிட்ட அமைச்சர் புதிதாக அமைக்கப் பட்டுள்ள வைத்தியாலை கட்டிடத் தொகுதியைப் பார்வையிட்ட துடன் அமைக்கப்படவுள்ள கட்டிடத் தொகுதிகள் குறித்தும் ஆராய்ந்தார்.

அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறவந்திருந்த பல்வேறு நோயாளர்களுடனும் கலந்துரை யாடி அவர்களது குறைநிறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் ஒசுசல (அரச மருந்து விற்பனை நிலை யம்) நிறுவனத்தின் கிளை ஒன்றினை அமைப்பதற்கு உரிய இடமொன்றையும் தெரிவு செய்து வழங்க விரைவில் நடவ டிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். மேலும் வைத் தியசாலையில் கழிவுகள், குப்பைகள் அகற்றப்படுதல் தொடர் பாக நேரில் பார்வையிட்டு தமது அதிருப்தியை வெளியிட்ட அமைச்சர் கூடவே வருகை தந்திருந்த யாழ். மாநகரசபை பிரதி முதல்வர் துரைராஜா இளங்கோவுக்கு உரிய பணிப்புரை களையும் வழங்கினார்.

இதேவேளை தம்மைச் சந்தித்த வைத்தியசாலையின் தனியார் சுத்திகரிப்பு தொழிலாளர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். போதனா வைத்திய சாலையின் அனைத்து பகுதிகளையும் சுத்தம் சுகாதாரத்துடன் வைத்திருக்க வேண்டுமென அவர்களிடம் தெரிவித்ததுடன் வைத்தியசாலையில் நிலவும் பதவி வெற்றிடங்களும் விரை வில் நிரப்பப்படும் என்றும் தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பதால் அதன் பின்னர் இந்தப் பதவிகள் அனைத்தும் நிரப்பப்படும் என்று தெரிவித்தார். (ச)

## நம்பிக்கை பொறுப்பாளர் சபை அங்குரார்ப்பணம்

22 வருடங்களின் பின்னர் சாவகச்சேரி ஜும்மா பள்ளி வாசலுக்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதில் ஜனாப் முகமட் அலி, அஸ்கர் றூமி ஆகியோரை இணைத் தலைவர்களாகவும் மற்றும் 9 நிர்வாக உறுப்பினர் களையும் கொண்டு 11 அங்கத்தவர்களுடன் இச் சபை இயங் கும் என இணைத்தலைவர்களில் ஒருவரான ஜனாப் முகமட் அலி தெரிவித்தார்.

மேலும் மீள் குடியேற்றத்தைத் துரிதப்படுத்தவும் இடிந்து அழிவடைந்த நிலையில் உள்ள பள்ளிவாசல் கட்டடங்களை புனரமைப்பதும் சகோதர சமூகங்களுடனான உறவைக் கட்டி யெழுப்பவும் தற்போதுள்ள பிரதான கடமை என்றும் தெரிவித் தார். (ஓ)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் ஆற்றல்கள்



உலகிலுள்ள அறிவு அனைத்தையும் மனதின் ஆற்றல்களை ஒரு முகப்படுத்துவதைத் தவிர வேறு எந்த வகையால் மக்கள் பெற்றிருக்கிறார்கள். மூடப்பட்டுள்ள கதவை எப்படித் தட்ட வேண்டும். எப்படித் தேவையான படி தாக்கவேண்டும் என்பது மட்டும் நமக்குத் தெரிந்தால் உல கம் தனது இரகசியங்களை வெளியிடத் தயாராக இருக்கிறது.

அத்தகைய வலிமையும் தாக்கும் வேகமும் மனதை ஒரு முகப்படுத்துவதன் மூலம் தான் கிட்டுகிறது. மனித உள்ளத்தின் ஆற்றலுக்கு ஓர் எல்லையே இல்லை.

மனது அதிகமாக ஒருமுகப்படப்பட அதன் ஆற்றல் அதிகமாக ஓர் இடத்தில் செலுத்தப் படுகிறது. இதுதான் மனதின் ஆற்றலைப் பற்றிய இரகசியமாகும்.

# தனி தெலுங்கானாவின் உதயம் கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை தானா?



தெலுங்கானா மக்களின் அரைநூற்றாண்டு காலத்துக்கும் மேலான கனவு,தற்போது நனவாகப்போகிறது. ஆந்திராவைப் பிரித்து, தனி தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்ற அவர்களின் ஆசை, நிறைவேறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தெலுங்கானா ராஷ்டிரிய சமிதித் தலைவர் சந்திரசேகரராவ் மேற்கொண்ட கடுமையான உண்ணாவிரதம் காரணமாக, தேசிய அளவில் இந்தப் பிரச்சினை அனைவரின் கவனத்தையும் தற்போது ஈர்த்துள்ளது. தெலுங்கானா என்றால்? தெலுங்கு பேசும் மக்கள் வசிக்கும் நிலம் (லாண்ட் ஓஃப் தெலுகுஸ்) என்பது தான்,தெலுங்கானா என்ற வார்த்தைக்கான அர்த்தம்.

மொழிவாரி மாநிலங்கள் உருவான போது, தெலுங்குபேசும் மக்கள் வசித்த பகுதிகளை, ஆந்திர மாநிலமாக உருவாக்க முடிவு செய்யப்பட்டது. இதுகுறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும்படி 1953 இல் அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு, மாநில சீரமைப்பு ஆணையத்தை நியமித்தார்.



மொழிவாரி மாநிலங்களை அமைப்பதில் உள்ள பிரச்சினை குறித்து, இந்த ஆணையம் ஆய்வு செய்தது. இந்த ஆணையம், தெலுங்கானா பகுதியை ஆந்திராவுடன் இணைப்பதற்கு ஆதரவாக கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையே, தெலுங்கானா மக்கள் இந்த இணைப்புக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கினர். தெலுங்கானா பகுதி,ஆந்திராவின் மற்றப் பகுதிகளை விட வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியாக உள்ளது. அதேநேரத்தில், வரிமூலம் அதிக வருவாய் கிடைக்கும் பகுதியாகவும் உள்ளது.

இந்த வருமானம் அனைத்தும் ஆந்திராவின் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படும் என, தெலுங்கானா பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

மாநில மறுசீரமைப்பு ஆணையமும், "ஆந்திரா, தெலுங்கானா பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலன் கருதி, இரண்டையும் தனித் தனி மாநிலங்களாக அமைப்பதே நல்லது" என மத்திய அரசுக்கு பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையை மத்திய அரசு நிராகரித்தது. 1956 நவம்பர் 1 இல் தெலுங்கானா பகுதி ஆந்திராவுடன் இணைக்கப்பட்டது. தெலுங்கானா மக்களை சமாதானப் படுத்தும் வகையில், "ஜென்டில்மேன் ஒப்பந்தம்" ஒன்றும் போடப்பட்டது. இதன் படி, வருவாய் நிர்வாகம் ஆகியவற்றை பகிர்ந்து கொள்ளலாம் எனக் கூறப்பட்டது.

ஆந்திர மாநிலம் உருவான அடுத்த சில ஆண்டுகளிலேயே, தெலுங்கானா பகுதி மக்கள் தாங்கள் ஏமாற்றப்படுவதாக உணர்ந்தனர். "ஜென்டில்மேன்" ஒப்பந்தத்தில் கூறப்பட்ட உத்தரவாதம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என அவர்கள் ஆவேசப்பட்டனர். தெலுங்கானா பகுதியில் இதை முன்னிறுத்தி 1963 இல் மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்தது.

மாணவர்களுக்கு ஆதரவாக, அரசு ஊழியர்கள், எதிர்க்கட்சியினரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் தெலுங்கானா போராட்டம் என அறிவிக்கப்பட்டது.

தெலுங்கானா கோரிக்கைக்காக 360 மாணவர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர்.ஆனால்,கூடுதலாக மொழிவாரி மாநிலங்களை உருவாக்குவது இல்லை என்ற விடயத்தில் காங்கிரஸ் அரசு உறுதியாக இருந்தது.சென்னாரெட்டி தெலுங்கானா மக்கள் கழகம் என்ற கட்சியைத் தொடங்கினார். பின்னர் இவர் காங்கிரஸில் சேர்ந்து ஆந்திரா முதல்வரானார். இதனால் தெலுங்கானா கோஷம் பிசுபிசுத்தது.

இடைப்பட்ட காலங்களில் தெலுங்கானா கோரிக்கையை வலியுறுத்தி தொடர்போராட்டங்கள் நடந்தாலும் அது பெரிய அளவுக்கு பேசப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் தான் நாங்கள் மத்தியில் ஆட்சிக்கு வந்தால் தெலுங்கானா தனி மாநிலம் உருவாக்குவோம் என 1990 இல் பா.ஜ.க. உறுதியளித்தது. ஆனால் பா.ஜ.க.மத்தியில் ஆட்சி அமைத்தும் தனது வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை. பா.ஜ.க.கூட்டணியில் அங்கம் வகித்த சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சி எதிர்ப்புத் தெரிவித்ததே இதற்குக் காரணம்.

இருந்தாலும் பா.ஜ.க. ஏற்படுத்திய திடீர் திருப்பம் காரணமாக 2000இல் தெலுங்கானா கோரிக்கைக்கு புது இரத்தம் பாய்ச்சப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் தான் தெலுங்கு தேசம் கட்சியின் முக்கிய தலைவராக இருந்த சந்திரசேகரராவ் அந்தக் கட்சியில் இருந்து விலகி 2001 இல் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி (டி.ஆர்.எஸ்) என்ற புதிய கட்சியைத் தொடங்கினார்.

தெலுங்கானா தனி மாநிலம் பெறுவது தான் இந்தக்கட்சியின் ஒரே கொள்கை. 2004 இல் நடந்த சட்டசபை மற்றும் லோக்சபா தேர்தல்களில் டி.ஆர்.எஸ்.கட்சி காங்கிரஸுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டது.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. அப்போது உருவாக்கப்பட்ட குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க நடவடிக்கை எடுப்பதாக காங்கிரஸ் உறுதி அளித்தது. ஆனால் 2 ஆண்டுகள் ஆகியும் காங்கிரஸ் இதை கண்டுகொள்ளவில்லை. இதையடுத்து காங்கிரஸுக்கு அளித்துவந்த ஆதரவை டி.ஆர்.எஸ்.கட்சி 2006 இல் வாபஸ் பெற்றது.

தெலுங்கானா விவகாரத்தில் மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் 2008 மார்ச்சில் டி.ஆர்.எஸ். கட்சியைச் சேர்ந்த நான்கு எம்.பிக்கள், 16 எம்.எல். ஏ.க்கள், மூன்று எம்.எல்.சி.க்கள் ஒட்டுமொத்தமாக தங்கள் பதவிகளை ராஜினாமா செய்து ஆந்திர அரசியலில் அதிர்வுகளை ஏற்படுத்தினர்.

காலியான இந்தத் தொகுதிகளுக்கு நடந்த இடைத் தேர்தலில் டி.ஆர்.எஸ். கட்சி 7 சட்டசபை தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது.

அதேபோல் நான்கு லோக்சபா தொகுதிகளில் இரண்டு தொகுதிகளில் மட்டுமே அந்தக் கட்சி வெற்றி பெற்றது. இதனால் தெலுங்கானா கோரிக்கை மீண்டும் பெட்டிப்பாம்பாய் அடங்கிப் போனது.




கடந்த ஆண்டு நடந்த லோக்சபா தேர்தலிலும் டி.ஆர்.எஸ்.கட்சிக்கு பெரிய அளவில் வெற்றி கிடைக்கவில்லை. இதனால் அந்தக் கட்சியின் செல்வாக்கு குறையத் தொடங்கியது.

கட்சியின் செல்வாக்கை அதிகரிப்பதற்காக மீண்டும் தெலுங்கானா கோசத்தை தூசு தட்டினார் சந்திரசேகரராவ். கடந்த வாரம் அதிரடியாக சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கிய அவர் மத்திய அரசுக்கு கடும் நெருக்கடி கொடுத்தார்.

இதையடுத்து பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா ஆகியோர் தீவிர ஆலோசனை நடத்தினர். இறுதியில் சந்திரசேகரராவின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றது.

தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளது. ஆனால் மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு ஆந்திராவின் ராஜலசீமான் மற்றும் கடலோர மாவட்டங்களில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

அந்தப்பகுதிகளைச் சேர்ந்த எம்.எல். ஏ.க்கள் பதவிகளை இராஜினாமா செய்துள்ளதால் மத்திய அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தனி தெலுங்கானா மாநிலம் அமையும் பட்சத்தில் தலைநகர் ஐதராபாத் யாருக்குச் சொந்தம் என்ற மோதல் தற்போதே உருவாகிவிட்டது.

### அடுத்தது என்ன?

தனி மாநிலம் அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என மத்திய அரசு அறிவித்தாலும் அது அத்தனை எளிதாக



நடந்துவிடாது என்றே தற்போதைய ஆந்திரா நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ராஜலசீமான் மற்றும் ஆந்திர கடலோர மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இதையடுத்து இந்தப் பகுதிகளில் வன்முறை வெடித்துள்ளது.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த காங்கிரஸ் தெலுங்கு தேசம் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்கள் தெலுங்கானாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து தங்கள் பதவிகளையே தூக்கி எறிந்துள்ளனர்.

ஆந்திர அரசியலில் ஏற்பட்டுள்ள இந்த திடீர் திருப்பம், கிணறு வெட்டப் போய் பூதம் கிளம்பிய கதையாகிவிட்டது. மத்திய அரசுக்கு தெலுங்கானாவுக்கான விடியல் கிடைத்தாலும் அது ஆந்திராவில் மற்றப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு கசப்பான விடயமாகத் தான் இருக்கும்.

தெலுங்கானா தனி மாநில கோரிக்கைக்கு மத்திய அரசு பணிந்ததையடுத்து மேலும் பல மாநிலங்களை உருவாக்க வேண்டும் என்ற கோஷம் வலுத்துள்ளது.

அது குறித்த விபரம்

- மேற்கு வங்கத்தைப் பிரித்து கூர்க்காலேண்ட் தனி மாநிலம்
- உ.பி.யின் மேற்குப்பகுதியைப் பிரித்து ஹரித்பிரதேச தனி மாநிலம்
- பிகாரைப்பிரித்து மிதிலாஞ்சல்
- கர்நாடகாவைப் பிரித்து கூர்க்மாநிலம்
- குஜராத்தைப் பிரித்து சௌராஷ்டிர மாநிலம்
- மகாராஷ்டிராவை பிரித்து விதர்பா மாநிலம்
- அசாம் மற்றும் மேற்கு வங்கத்தின் சில பகுதிகளை இணைத்து கூச் பெகார் மாநிலம்
- தமிழகத்தில் தென்னகத்தைப் பிரித்தல்.

இதுதவிர புதுச்சேரியில் இருந்து காரைக்காலைப் பிரித்து தனி யூனியன் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

# தென்னாபிரிக்க வீரர்கள் சம்மதம் தெரிவிப்பு

(கேப்டவுன்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டில் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 ஒரு நாள் போட்டிகளில் ஆட திட்டமிட்டுள்ளது.


ஆனால் அவற்றை 3 ஒரு நாள் போட்டியாகக் குறைத்துக் கொண்டு கூடுதலாக 2 டெஸ்டில் ஆடும்படி இந்தியக் கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது பற்றி தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகின்றது. இந்த நிலையில் புதிய பரிந்துரைக்கு வீரர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாகத் தென்னாபிரிக்க வீரர்களின் சங்கத் தலைமை நிர்வாகி டோனி அரிஸ் கூறியுள்ளார்.

5 ஒரு நாள் போட்டியில் விளையாடுவதை விட 2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டியில் ஆடுவது சிறந்தது. ஏனெனில் இந்த ஆண்டில் நாங்கள் குறைவாகவே டெஸ்ட் விளையாடியுள்ளோம். எனவே மேலும் டெஸ்ட் போட்டிகளில் ஆட ஆர்வமாக இருக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். இதன் மூலம் தென்னாபிரிக்க அணி இந்தியாவின் டெஸ்ட் தொடரில் பங்கேற்பது ஏறக்குறைய உறுதியாகியுள்ளது.

# நியூசிலாந்து அணி முன்னிலை; பாகிஸ்தான் நிதானமான ஆட்டம்


விக்டோரி


தௌப்பி


கனேரியா

(நேபியர்)

இம்ராம் பர்காத்-சல்மான் பட் ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி நேற்றைய 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் 2-வது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 128 ஓட்டங்களை எடுத்தது.

நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதல் 2 போட்டிகளில் இரு அணிகளும் தலா 1 வெற்றி பெற்று தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையிலுள்ளது. இந் நிலையில் தீர்க்கமான 3-வதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 11 ஆம் திகதி நேபியரில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 223 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இம்ரான் பர்காத் ஆட்டமிழக்காமல் 117 ஓட்டங்களையும் உமர் குல் 24, மொகமட் ஆமீர் 23, கம்ரான் அக்மல் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஓ பிறின், தௌப்பி ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் மாட்டீன், சௌத்தி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 471 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித் தலைவர் டானியல் விக்டோரி 134 ஓட்டங்களையும் மக்குலம் 89, தௌப்பி ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களையும் மைக்கின் றோஸ் 74 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் டனிஷ் கனேரியா 7 விக்கெட்டுக்களையும் மொகமட் ஆஸிப் 2 விக்கெட்டுக்களையும் உமர் குல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 248 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த பாகிஸ்தான் அணி 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 128 ஓட்டங்களை எடுத்தது.

இதில் இம்ரான் பர்காத் 55 ஓட்டங்களையும் சல்மான் பட் 66 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். இப் போட்டியின் 4 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பன்றிக் காய்ச்சல் பீதியில் இந்திய வீரர்கள்; இலங்கை அணி வீரர்களுக்கு அச்சமில்லை

(மொகாலி)

சிறிசாந்தைத் தொடர்ந்து இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் பன்றிக் காய்ச்சல் பீதியில் உள்ளனர்.

சோதனை முடிவில் காம்பீருக்குப் பன்றிக் காய்ச்சல் இல்லை என்பது தெரிய வர, நேற்றைய இருபது-20 போட்டியில் பங்கேற்றார். தற்போது பஞ்சாப் மாநிலம் மொகாலியில் இந்திய வீரர்கள் உள்ளனர்.

இங்கு வந்த சிறிசாந்துக்குத் திடீரெனப் பன்றிக் காய்ச்சல் ஏற்பட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அணியின் முகாமையாளர் மயங்க் பரேக்குக்குப் பன்றிக் காய்ச்சல் அறிகுறி தென்பட்டதையடுத்து உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பரிசோதனை நடத்தது. முடிவில் சாதாரண காய்ச்சல்தான் என உறுதிப்படுத்தப்பட்டது.

## காம்பீர் நிம்மதி

இதனிடையே இந்திய அணியின் ஆரம்ப ஆட்டக்காரர் காம்பீருக்கும் பன்றிக் காய்ச்சல் அறிகுறி தென்பட அவரது இரத்த மாதிரியும் சோதனை செய்யப்பட்டது. இதன் முடிவில் பன்றிக் காய்ச்சல் இல்லை என்பது உறுதியானது.

தொடர்ந்து ஒட்டுமொத்த இந்திய வீரர்களுக்கும் பயிற்சியாளர் உள்ளிட்ட மற்றைய உதவியாளர்களுக்கும் பன்றிக் காய்ச்சலைத் தடுக்கும் மாத்திரைகள் வழங்கப்பட்டன.

## வீரர்களுக்குச் சோதனை

இது குறித்துப் பஞ்சாப் பன்றிக் காய்ச்சல் தடுப்புப் பிரிவு அதிகாரி தீபக் பாட்டியா கூறுகையில்,

சிறிசாந்துக்குப் பன்றிக் காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து மத்திய சுகாதாரப் பிரிவின் வைத்தியர்கள் அடங்கிய குழு தாஜ் ஹோட்டலுக்கு விரைந்து வந்தது. சிறிசாந்துக்கு நெருக்கமாகவுள்ள வீரர்கள் உட்பட பலருக்கும் முழுமையாகப் பரிசோதனை செய்தனர் என்றார்.

## வழக்கமானதுதான்

இது குறித்துப் பஞ்சாப் கிரிக்கெட் சங்க இணைச் செயலாளர் (பி.சி.ஏ) ஜி.எஸ்.வாலியா கூறுகையில்,

சிறிசாந்துக்கு மட்டும்தான் பன்றிக் காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டது. மற்றையவர்களுக்கு வழக்கமாக செய்யப்படும் மருத்துவப் பரிசோதனைதான் நடத்தப்படுகின்றது என் றார்.

## இலங்கை அணி நிம்மதி

இலங்கை அணியின் முகாமையாளர் சுசில் கபூர் இது குறித்துக் கூறுகையில்,

இலங்கை வீரர்கள் எல்லோரும் தங்கள் பயிற்சியை வழக்கமாக மேற்கொண்டனர். பன்றிக் காய்ச்சல் பாதிப்புக் குறித்து எதுவித பயமும் இல்லாமல் சாதாரணமாகவுள்ளனர் என்றார்.

## தேறி வருகின்றார் சிறிசாந்

மொகாலியில் போர்ட்டிஸ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள சிறிசாந் குறித்து அதன் இயக்குநர் டாக்டர் ஏ.ஆர்.பானர்ஜி கூறுகையில்,

சிறிசாந் தற்போது உடல் நலம் தேறி வருகின்றார். அவர் இன்னும் 2 அல்லது 3 நாள்களுக்கு வைத்தியசாலையில் இருக்க வேண்டியிருக்கும். அவரது உடல் நிலையில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்துத்தான் டிஸ்சார்ஜ் செய்வது குறித்து முடிபெடுக்கப்படும் என்றார்.



# திருமண பந்தம் முறியாமல் இருக்க

# கோல்ப் 'சுப்பர் ஸ்ரார்' டைகர் உட்ஸ் காலவரையற்ற ஓய்வை அறிவித்தார்

(லாஸ் ஏஞ்சல்ஸ்)

கோல்ப் அரங்கில் டைகர் உட்ஸ் சகாப்தம் அநேகமாக முடிகின்றது. பல பெண்களுடன் இவருக்கு உள்ள தவறான தொடர்பு அம்பலமாக மனைவிக்குச் செய்த துரோகத்தைப் பகிரங்கமாக ஒத்துக் கொண்டுள்ளார்.

தனது திருமண பந்தம் முறியாமல் இருக்க கோல்ப் போட்டிகளில் இருந்து காலவரையற்ற பிரேக் எடுப்பதாக அதிரடியாக அறிவித்துள்ளார். இதனால் இரசிகர்கள் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் டைகர் உட்ஸ் கோல்ப் அரங்கில் சூப்பர் ஸ்டாரான இவர் கடந்த 2003 இல் சுவீடனைச் சேர்ந்த பிரபல மொடல் அழகி எலின் நார்டிகிரனை திருமணம் முடித்தார்.

இவர்களுக்கு 2 வயது மகள் சாம், 10 மாதமான மகன் சார்லி ஆகிய இரண்டு குழந்தைகள் உண்டு. சமீபத்தில் புளோரிடாவில் உள்ள தனது வீட்டின் அருகே கார் விபத்தில் சிக்கி டைகர் உட்ஸ் காயமடைந்தார்.

இதிலிருந்து இவரது தனிப்பட்ட வாழ்க்கையில் புயல் வீசத் தொடங்கியது.

## தவறான தொடர்பு

இவருக்குப் பல பெண்களுடன் முறையற்ற உறவு தொடர்பிருப்பது தெரியவந்தது. இதையடுத்து வீட்டைவிட்டு வெளியேறிய மனைவி எலின், விவாகரத்தைத் தவிர்க்க வேண்டுமானால் கோல்ப் விளையாட்டிலிருந்து டைகர் விலக வேண்டும் என நிபந்தனை விதித்தார்.

இதனை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். இது தொடர்பாக தனது வெப் தளத்தில் டைகர் வெளியிட்டுள்ள செய்தியில் நான் செய்த துரோகம் காரணமாக எனது மனைவி, குழந்தைகள் உட்பட ஏராளமானோர் மனதளவில் அடைந்த காயம் மற்றும் ஏமாற்றத்தைப் பற்றி நன்கு அறிவேன்.

இதற்காக அனைவரிடமும் மீண்டும் ஒரு முறை மன்னிப்புக் கேட்கின்றேன். என்னைப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன். நான் செய்த தவறால் ஏற்பட்ட பாதிப்பைச் சரி செய்ய முடியாது.

ஆனாலும் பாதிப்பைச் சரி செய்ய என்னால் முடிந்தளவுக்கு முயற்சி செய்வேன். எனது நிலைமையைப் புரிந்து கொள்ளும்படி இரசிகர்கள், பிசினஸ் பார்ட்னர்கள், பி.ஜி.ஏ, தொடர் நிர்வாகிகள் மற்றும் சக வீரர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

தனிப்பட்ட முறையில் சமரசம் செய்து கொள்ள எனது குடும்பத்திற்குத் தனிமை மற்றும் பாதுகாப்பான இடம் தேவைப்படுகின்றது. நீண்ட நேரம் யோசித்த பின் தொழில் ரீதியான கோல்ப் போட்டிகளில் இருந்து காலவரையற்ற முறையில் விலகியிருக்க முடிவு செய்துள்ளேன்.

இனி நல்ல கணவராக, தந்தையாக, மனிதராக இருப்பதில் கவனம் செலுத்தப் போகின்றேன். எனது குடும்பத்திற்குத் தனிமை தேவைப்படுகின்றது என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகின்றேன்.

இந்த இக்கட்டான காலத்தில் எனக்கு ஆறுதலளித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் இவ்வாறு உட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கோல்ப் போட்டிகளில் இருந்து காலவரையற்ற பிரேக் எடுத்துள்ள டைகர், தனது முடிவை மாற்றி மீண்டும் களமிறங்கலாம். ஆனாலும் 33 வயதாகி விட்டதால் விரைவில் நிரந்தர ஓய்வை அறிவிப்பார் என தெரிகின்றது.

## இழப்பு அதிகம்

கோல்ப் போட்டிகளில் கடந்த 12 ஆண்டுகளாக அசைக்க முடியாத வீரராக டைகர் உட்ஸ் விளங்கினார். யு.எஸ்.ஓபன்; பி.ஜி.ஏ., சம்பியன்ஷிப் உள்ளிட்ட முக்கிய தொடர்களில் 14 பட்டங்கள் கைப்பற்றியுள்ளார்.

உலகின் பணக்கார வீரரான இவர், இந்த ஆண்டு மட்டும் கோல்ப் மூலம் ஆயிரத்து 200 கோடி ரூபாய் சம்பாதித்துள்ளார். தற்போதைய முடிவால் இவருக்கு மட்டுமல்ல விளம்பரதாரர்களுக்கும் நிறைய இழப்பு ஏற்படும்.

இவர் இல்லாத நிலையில் முக்கிய தொடர்களுக்கு வரவேற்பு இருக்காது. கடந்த ஆண்டு முழங்கால் பகுதியில் சத்திரசிகிச்சை செய்து கொண்ட உட்ஸ் 8 மாதங்கள் ஓய்வில் இருந்தார்.

அப்போது கோல்ப் போட்டிக்கான ரிவி பார்வையாளர்களின் எண்ணிக்கை 50 சதவீதமாகக் குறைந்து போனதாம்.

# சரணடையும் புலிகளின் தலைவர்களை...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சரணடையும் விடுதலைப் புலிகளின் தலைவர்களை உடனடியாகவே படுகொலை செய்யுமாறு வடபகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த முக்கிய இராணுவ கட்டளை அதிகாரிக்கு பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவை வழங்கியிருந்தார்.

இறுதிக்கட்ட சமரில் எனக்கு அதிக தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை. போர் நிறைவடையும் சமயத்தில் விடுதலைப் புலிகளின் மூன்று முக்கிய தலைவர்கள் சரணடைய முயன்றிருந்தனர்.

அது தொடர்பான தகவல்கள் நோர்வே, வேறு வெளிநாட்டு அமைப்புகள் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நான் போரை வழிநடத்திய போதும் அது தொடர்பான தகவல்கள் எனக்கு தெரிவிக்கப்படவில்லை.

பின்னர் பசில் இது குறித்து கோத்தபாயவுக்கு தெரிவித்திருந்தார். ஆனால் அவர் 58ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சவேந்திர சில்வாவை தொடர்பு கொண்டு சரணடையும் விடுதலைப் புலிகளின் தலைவர்களை உடனடியாக கொல்லுமாறு கட்டளையிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மே மாதம் 18ஆம் திகதி அதிகாலை சரணடைய முயன்ற விடுதலைப் புலிகளின் தலைவர்களான அரசியல்துறை பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலக பணிப்பாளர் சீ.புலித்தேவன், கட்டளைத் தளபதி கேணல் ரமேஷ் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஆனால் அவர்களின் சடலங்களை 18 ஆம் திகதி காலை தாம் கண்டெடுத்ததாக அரசு தெரிவித்திருந்தது. வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதிக்கு வடக்காக விடுதலைப் புலிகளின் அணிகளை படையினர் 100மீற்றர் பரப்பளவினுள் சுற்றிவளைத்த போது இந்த சம்பவம் நிகழ்ந்தது.

சரணடையவதற்கு முன்னர் இரு அரசியல் தலைவர்களும் பல ஈ-மெயில்கள், செல்லிட தொலைபேசித் தகவல்கள், தொலைபேசி அழைப்புக்களை வெளிநாட்டு அரசுகளிற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களிற்கும் கொழும்பில் உள்ள அதிகாரிகளிற்கும் மேற்கொண்டிருந்தனர்.

வெள்ளைகொடிகளை பிடித்தவாறு, கைகளை உயர்த்திக் கொண்டு நடந்து செல்லுமாறு அவர்களிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் அவ்வாறு சென்ற போதும் அவர்களும் அவர்களின் குடும்பத்தவர்களும் சுட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

ஆனால் அவர்களை வெள்ளை கொடிகளை ஏந்தியவாறு வருமாறு பசில் ராஜபக்ஷவும், கோத்தபாயவுமே தெரிவித்திருந்ததாக அவர் கூறினார்.

### ஊடக மாநாடு

இதேவேளை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்து நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடொன்று நடைபெற்றது.

நேற்று நண்பகல் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு தெரிவிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சட்டத்தரணி நிசாம் காரியப்பர், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் செயலாளர் எஸ்.சதாசிவம், நவ சியல உறுமய கட்சியின் தலைவர் சரத் மனமேந்திர உட்பட பல அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### தேர்தல் குறிக்கோள்

இந்த செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா நான் எதிர்க் கட்சி தலைவர்களின் வேண்டுகோளிற்கிணங்க இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றேன். நான் ஜனாதிபதி தேர்தலில் சில முக்கிய குறிக்கோள்களை அடிப்படையாக கொண்டு போட்டியிடுகின்றேன்.

✳ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை இல்லாதொழித்தல்.

✳ நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுதல்.

✳ மக்கள் சக்திக்காக அதிகாரம் கொண்ட நாடாளுமன்ற முறைமையினை நிறுவுதல்.

✳ ஊழல், மோசடியை இல்லாதொழித்தல்.

✳ ஊடக சுதந்திரத்தை நிலைநாட்டுதல்.

✳ இலங்கையில் சட்டம் நீதியை நிலைநிறுத்தி வாழ்வதற்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.

✳ அபிவிருத்தியை மேற்கொள்ள தேவையான மாற்றங்களை மேற்கொண்டு நாட்டை அபிவிருத்தியின் பாதையில் இட்டுச் செல்லுதல் போன்றவற்றை அடிப்படையாக கொண்டு போட்டியிடவுள்ளேன்.

இலங்கையில் தற்போது என்னைப்பற்றியும் என்செயற்பாடுகள் பற்றியும் பல்வேறான கருத்துக்கள் நிலவுகின்றது. இவையெல்லாம் அரசாங்கத்திற்கு சார்பான ஊடகங்களை கொண்டு என்மீது சேறு பூசும் நடவடிக்கையே.

என்னைப் பொறுத்த வரையில் ஊட்கம் என்பது இலங்கையில் மிகவும் கீழ்த்தரமாக நடத்தப்படுகின்றது.

அரச ஊடகங்கள் தனியே ஒரு குடும்ப செய்திக்காவே செயற்படுகின்றன. இதனை மாற்ற வேண்டும். ஆகையால் ஊடகவியலாளர்களே நீங்கள் நடுநிலையாக செயற்படுங்கள் உண்மையை எழுதுங்கள். ஒரு நிலை சார்ந்து துரோகி என்ற பெயர் கொள்ளவேண்டாம்.

### எப்படி இருந்த நான் இப்படி ஆகிவிட்டேன்

சுமார் 15வருடங்கள் அமெரிக்காவில் வசித்துவந்த இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இலங்கையின் நிலைமை குறித்து தெரியாதவர்.

இவர் இராணுவத்தில் கணணி இயக்குநராகவே பணிபுரிந்தார். அவ்வாறு பணிபுரிபவர்களை நாம் கோப்ரல் என்றே அழைப்போம் அப்படியான கோப்ரல்தான் எனக்கு யுத்தம் தொடர்பாகவும் யுத்ததந்திரம் தொடர்பாகவும் அறிவுரை வழங்கியதாக அரச ஊடகங்களில் தெரிவித்து வருகின்றார். இது நகைப்பிற்குரியது.

உலகமே போற்றும் இராணுவத்தளபதியாக சித்திரிக்கப்பட்ட நான் எனது ஓய்வின் பின்னர் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளதென்றால் சாதாரண பதவிகளிலிருந்து ஓய்வு பெறுபவர்களின் நிலைமைகளை யோசித்து பாருங்கள்.

யுத்தம் பற்றி கதைத்தவர்களையா? யுத்தத்தை நடத்தி வெற்றிபெற்றவர்களையா? யுத்த வெற்றி சென்றடையும்.

இன்று நாங்கள் பெற்ற யுத்த வெற்றி அவர்கள் பெற்ற வெற்றியாக கருதி தெருவிற்கு தெரு ஏன் 20அடி தூரத்திற்குள் அமைந்துள்ள மின்கம்பங்களிலும் ஜனாதிபதியினது புகைப்படம் தாங்கிய பதாகைகள் தொங்கவிட்டுள்ளன.

பாரிய உயிர் அர்ப்பணிப்பு செய்து அங்க அவயங்களை இழந்து இராப்பகலாக கண்விழித்து பெறப்பட்ட இந்த வெற்றி தற்போது நாய்கள் சிறுநீர்கழிக்கும் மின்கம்பங்களில் தொங்கவிடப்பட்டுள்ளது.

### 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு

நான் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது அரச ஊழியர்களுக்கு 10ஆயிரம் ரூபா சம்பள உயர்வு பெற்றுத் தருவதாக தெரிவித்தேன்.

இதற்கு இந்த அரசிலுள்ள அமைச்சர்கள் இவர் எப்படி இவ்வாறு தெரிவிக்கலாம். இவருக்கு அரசியல் தெரியாது. பொருளாதாரம் தெரியாது. இவர் முட்டாள் இவரால் எப்படி இந்த நாட்டை வழிநடத்த முடியும் எனவும் குறிப்பிடுகின்றனர்.

நான் ஜனாதிபதியானால் விலை குறைப்பு செய்யப்படும் என்றால் இதனையும் நான் தேர்தலைக் குறிக்கோளாக வைத்து வழங்கும் பொய் உறுதிமொழிகள் என்றே அவர்கள் தெரிவிப்பார்கள்.

### ஊழல் மோசடிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

யுத்தம் செய்தது நாங்களே அவர்கள் அல்ல. அவர்கள் அவர்களின் பொறுப்புகளை செய்யவேண்டும். உதாரணமாக ஒரு வைத்தியர் அறுவை சிகிச்சை செய்தால் அதனைத் தாங்கள் தான் செய்ததாக கூறமுடியுமா? அல்லது ஒரு பொறியிலாளர் ஓர் இயந்திரத்தை திருத்தினால் அதனை தாம் தான் திருத்தினோம் என்று கூறமுடியுமா? இவ்வாறே இந்த அரசாங்கம் தெரிவித்து வருகின்றது. யுத்தம் புரிந்தது நாங்கள். வெற்றி பெற்றதும் நாங்கள். ஏதோ தாம் யுத்தம் புரிந்ததாக தெரிவித்து வருகின்றனர். இதனை யார்தான் நம்புவார்கள்.

நாம் யுத்தம் செய்த வேளை அவர்கள் இந்த நாட்டை சிறந்த முறையில் வழிநடத்தியிருக் கலாம். அதனைவிடுத்து யுத்தகாலத்தின் போது பல கோடி பணத்தை சுருட்டி அதன் மூலம் சொத்துக்களை கொள்வனவு செய்து ஊழலில் ஈடுபட்டுள்ளார்கள்.

நான் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியானதும் இந்த ஊழல் மோசடி குறித்து விசாரணை நடத்தி ஒவ்வொரு குற்றத்தையும் அம்பலப்படுத்தி அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்றார். (ச-3,5)


## மாபெரும் மலிவு விற்பனை

30 வருட நிறைவையொட்டி சுந்தர்சனால் நடாத்தப்படும் மாபெரும் மலிவு விற்பனை வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**சுந்தர்சன்**

யாழ்.வீதி, மானிப்பாய். (C-3928)

## A/L 2010

## கலை, வர்த்தக, கணித, உயிரியல் மாணவர்களுக்கான

## GIT வழிகாட்டல் கருத்தரங்கு

எதிர்வரும் 20.12.2009 அன்று நடைபெறவுள்ள பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

**Lectured by: N.அம்ச (B.Sc, Dip.in Ed. M.Ed)**
**(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் I.C.T )**

பின்வரும் நிறுவனங்களில் ஆரம்பமாகின்றன

பொருளியற் கல்லூரி-இணுவில்
15.12.2009- செவ்வாய்
2.00 PM

பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம்
16.12.2009- புதன்
8.30 AM

BARATHY - சித்தன்கேணி
16.12.2009-புதன்
11.30 AM

- மூன்று நாட்கள் நடைபெறும்.
- கையேடுகள் வழங்கவுள்ளதால் உங்கள் அனுமதிகளை 15.12.2009 இற்கு முன் பெற்றுக்கொள்ளவும்.

(C-3924)

## ACCA to your future in Finance and Accounting

### Association of Charted Certified Accountants

வழங்கும்
யாழ் குடாநாட்டு மாணவர்களுக்கான
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் -கல்வியாண்டு- 2010
இலங்கை உட்பட 170 நாடுகளில் அங்கீகாரம் பெற்ற முதற் தர சான்றிதலளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனம்.

**(1) Certified Accounting Technician (*CAT*)**
சான்றிதலளிக்கப்பட்ட கணக்கீட்டு தொழில்நுட்பம்.
(விண்ணப்பிப்பதற்கு கீழ்வரும் ஏதாவது ஒரு தகைமை போதுமானது)
- முகாமைத்துவ,வணிக கற்கைகளில் ஆர்வமுடையவர்கள், அடிப்படை தகுதிகளை எதிர்பார்ப்பவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.
- க.பொ.த (சா/தா) தகுதி / பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் விண்ணப்பிக்கமுடியும். மேலும் வெளிநாடுகளில் வேலையுடன் தொடரக்கூடிய வசதிகள் வழங்கப்படுகிறது.
- தொழில் சார் அனுபவமுடையவர்கள்
- 16 வயதுக்கு மேற்பட்டவர்களாயின் விண்ணப்பிக்க முடியும்.

**(2) Association of Charted Certified Accountants (*ACCA*)**
சான்றிதலளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் கற்கை நெறி.
(விண்ணப்பிப்பதற்கு கீழ்வரும் ஏதாவது ஒரு தகைமை போதுமானது)
- G.C.E (O/L) மூன்று பாடங்களுடன் G.C.E (A/L) இரண்டு பாடத் தகுதிகள் போதுமானது. கணிதம் ,ஆங்கிலம் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
- க.பொ.த (உ/த்)த்தில் பரீட்சை பெறுபேறு கிடைக்கப்பெற்ற எத்துறை சார்ந்தவர்களும் விண்ணப்பிக்கமுடியும். உ+ம்: வர்த்தகம், கலை, விஞ்ஞானம், கணிதம்
- துறை சார்ந்த தொழில் தகுதியுடையவர்கள்.. உ+ம்: வங்கியாளர்,உத்தியோகத்தர்கள்
- 21 வயதுக்கு மேற்பட்டவர்களாயின் Mature Student Entry Route வகையில் அனுமதி.
- வகுதி (1),(2) கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்கள் B.Sc(Hons) in Applied Accounting கற்கை நெறியினை Oxford University -UK இல் பூர்த்தி செய்வதற்கான விசா Work permit உடன் வழங்கப்படுகின்றது.

**(3) Graduate/ Under Graduate Programme:**
விலக்களிப்புத் திட்டம் (முழுமையாக/ பாட ரீதியாக):
Exemption Scheme: B.Com/BBA/HNDA/HNDM/HNDBS
- இத்திட்டத்தின் கீழ் வகுதி (1), (2) இல் குறிப்பிட்டுள்ள கற்கை நெறிகளில் பட்டதாரிகள் உள்வாங்கப்படவுள்ளனர்.
- இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக, உயர் தொழில்நுட்ப மாணவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பிக்கும் முறை: சுயவிபரக் கோவையுடன் (பெயர், விலாசம், தொலைபேசி இல, கல்வித் தகைமை) போன்ற விபரங்களுடன் தெரிவு செய்த் புலமைப் பரிசில் திட்டத்தின் பெயரினை (3 திட்டங்களிலிருந்து) இடது பக்க மேற்பகுதியில் குறிப்பிட்டு தபாலினூடாக அனுப்பிவைக்கவும்.

தெரிவு முறை: புலமைப் பரிசில் திட்டம், கட்டணச்சலுகை, கற்கை நெறி, பரீட்சை போனற விபரங்கள் தபால் ஊடாக அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: **Mr.N.Sujeevan,
Asst.Coordinator,
Institute for Professional studies (IPS),
92/1 Sir.Pon.Ramanathan Road, Jaffna.**

- விண்ணப்ப முடிவு திகதி: 25-12-2009.

**Interested? Talk to us! Our friendly staff in Colombo will be happy to answer your questions. Call Brinda or Dilani on 2301920.**

**ACCA, Srilanka** (C-3909)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.